Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 19 சனிக்கிழமை (03.01.2015) பக்கங்கள் 20 ஓசை – 095

# மக்கள் வெள்ளத்தில் மகிந்த



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் இடம்பெற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் என்றுமில்லாதவாறு பல்லாயிரக்கணக்கான மக்கள் அலைகடலென திரண்டனர். யாழ். நகரில் உள்ள துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுக் காலை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் எதிர்பார்த்ததைவிட அதிகளவு மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டதை அவதானிக்க முடிந்தது.

நேற்று முற்பகல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற இந்த பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து 40 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் நகரை நோக்கி படையெடுத்த மக்கள் மேற்படி கூட்டத்தில் முண்டியடித்துக்

19 ஆம் பக்கம் பார்க்க

## துணிச்சலான தலைவர் மகிந்த பலம்சேர்க்க கரம் கொடுப்போம்

### அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்தகால தலைவர்களுடன் ஒப்பிடும்போது மிகவும் துணிச்சலான தலைவராக மகிந்த ராஜபக்ஷவையே நான் பார்க்கிறேன். அவர் ஒரு யதார்த்தவாதி. சொல்வதையே செய்வார். செய்வதையே சொல்வார். எனவே அவருக்கு வாக்களித்து இப்போதுள்ள ஆட்சியை நீடிக்கச் செய்வதே தமிழ் மக்கள் செய்யக்கூடிய ஒரு நடைமுறை சாத்தியமான காரியமாகும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரசாரக் கூட்டத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## யார் எந்தப் பக்கம் தாவினாலும் நான் மக்களின் பக்கமே

### பலத்த கரகோஷத்தின் மத்தியில் மகிந்த

(யாழ்ப்பாணம்)

யார் எந்தப் பக்கம் தாவினாலும் நான் என்றும் உங்களின் பக்கமே என்றும் உங்களின் எதிர்காலம் இன்னும் ஒளிபெற வேண்டும் என்றால் அனைவரும் என்னுடன் இணையுங்கள். உங்களது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி சிந்தித்து செயற்படுங்கள். நீங்கள் எதிர்காலத்தில் முன்னோக்கிப் போவதா? பின்னோக்கிப் போவதா? என்பதை நன்கு யோசித்து செயலாற்றுங்கள்.

யார் யார் எந்தப் பக்கம் போனாலும் நான் உங்களின் பக்கம் நின்று உங்களை எப்போதும் பாதுகாப்பேன். நீங்கள் என்னை நம்பலாம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசனில் இருந்து ரயில் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான புகையிரத சேவை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை புகையிரத நிலையத்திலிருந்து நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ சேவையினை அமைச்சர்களான சுசில் பிரேம, ஜயந்த, குமார வெல்கம,

19 ஆம் பக்கம் பார்க்க

வெடித்து
சிதறியது படகு
மர்மம் என்ன
பக்கம்:19



# முகமது நபிகள் மிலாத் விழா

(யாழ்ப்பாணம்)

முகம்மது நபி (ஸல்) அவர்களது பிறந்த தினத்தை முன்னிட்டு நாளை காலை 7.00 மணிக்கு யாழ்.காதிஅபுபக்கர் வீதியில் உள்ள முஹிதீன் தக்கியாவில் (சிவலைபள்ளி) சன்மார்க்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

காலை மௌலூத் மஜ்லிஸுடன் குர்ஆன் தமாமும், நாட்டுக்கும், சகல மக்களுக்கும் சாந்தி, சமாதானத்திற்காகவும், சுபீட்சத்திற்காகவும் விசேட துவா பிரார்த்தனை நடைபெற்று பகல் (நாரிசா) உணவும் வழங்கப்படவுள்ளன.

தொடர்ந்து எதிர்வரும் 6 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு மார்க்க உபண்ணியாசமும் இடம்பெறவுள்ளன. (105)

# வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் ஊழியர் நலன்பேண தொழிற்சங்கம் அவசியம்

## பல்வேறு தரப்பினரும் விருப்பம்.

(திருநெல்வேலி)

ஊழியர் சங்கமொன்று உருவாக்கப்படல் வேண்டும் எனப் பல ஊழியர்களினால் விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில். பணிபுரியும் ஊழியர்களின் நலன்கள் பாதுகாக்கப்படவில்லை எனப் பலராலும் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஊழியர்களுக்கான சேமலாப நிதி செலுத்தப்படாமை, மேலதிக நேரக்கொடுப்பனவு, விடுமுறை நாட்களிலும் வேலை போன்ற பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு இவ் ஊழியர் சங்கத்தினது அவசியம் உணரப்பட்டுள்ளது.

ஊழியர்களுக்கென ஒரு தொழிற்சங்கம் இருக்குமானால் ஊழியர்களின் தேவைகளை உரிய வகையில் நிலை நாட்டுவதற்கு உதவியாக இருக்கும் என நம்பப்படுகிறது.

வர்த்தகர்களுக்காக சில இடங்களில் வணிகர் நிலையங்கள் செயற்பட்டாலும் யாழ்ப்பாணம் வணிகர் கழகம் மட்டுமே பெரிதாகச் செயற்படுகிறது.

இதேபோல், ஊழியர் சங்கம் ஒன்றும் ஊழியர்களுக்காக உருவாக்கப்படல் வேண்டும் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழியர் சங்கம் உருவாக்கப்பட்டு அது வணிகர் கழகத்துடன் இணைந்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் வர்த்தகத்துறை இரு பகுதியினருக்கும் நன்மை பயப்பதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (137)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | சனிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00 | Morning Songs |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | ஆரோகனம் |
| Am 09.30 | My Styl |
| Am 09.55 | காலை செய்தி |
| Am 10.00 | ஆரோக்கியமான வாழ்வு |
| Am 11.00 | மக்கள் முகம் |
| PM 11.30 | I T.Com |
| PM 12.00 | காதல் கீதங்கள் |
| PM 12.30 | சிரிக்க சிரிக்க |
| PM 01.00 | மதிய செய்தி |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்தி |
| PM 04.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00 | அதிர்வுகள் |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தெரிந்தல் சொல்லுங்கல் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | இதய ஊஞ்சல் |
| PM 09.00 | ஆங்கில திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

## சமாதான நீதவான்

(யாழ்ப்பாணம்)

யாழ்.காமால் வீதியில் வசிக்கும் திருமதி அப்துல் முத்தலிப் பாத்திமா ஸியானா யாழ்ப்பாண நீதி நிருவாக வலயத்துக்கான சமாதான நீதவானாக நியமனம் பெற்றுள்ளார்.

இவர் சோனக தெற்கு கிராம அபிவிருத்தி அமைப்பின் செயலாளராகவும், சமூக வளவாளராகவும், மலரும் பூக்கள் சர்வோதய சிரமதான சங்கத்தின் செயலாளராகவும், சே.டபிள்.எம்.ஏ. அமீர் முன்பள்ளி ஆசிரியையாகவும் சேவை புரிந்தமைக்காக சமாதான நீதவான் நியனம் வழங்கப்பட்டுள்ளது. (105)

## யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஒன்றுகூடலும்

## ஊடகவியலாளர் சிவராம் (தராகி) ஞாபகார்த்த நினைவுப் பேருரையும்

இடம் : கிறீன் கிறாஸ் ஹோட்டல்

காலம் : 03.01.2015

நேரம் : பிற்பகல் 2.30

தலைமை : சிவநாதன் ரவீந்திரா (ஊடகவியலாளர்)

மங்கள விளக்கேற்றல் :

சிவராமின் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செய்தல்

"தமிழ்த் தேசியமும், சிவராமும்"

நினைவுப் பேருரை மூத்த ஊடகவியலாளர்

நன்றியுரை

இந்நிகழ்வில் ஊடகவியலாளர்களை அன்புடன் அழைக்கின்றோம்

ஏற்பாடு : யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கம்.

## ஊர்காவற்றுறை பிரதேசசபை

# பொது அறிவித்தல் - 2015

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | பட வரைஞராக பதிவு செய்தல் - 2015 | பட வரைஞர்கள் | புதிய பதிவுகலையும் புதுப்பித்தலகளையும் 31.01.2015 ற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டும். |
| 02 | வியாபார அனுமதிப்பத்திரம் - 2015 (1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபை சட்டத்திற்கமைய) | பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் பொருட்களை விநியோகம் செய்வோர், சேவைகளை வழங்குவோர், உயர் தொழிலில் ஈடுபடுவோர். | உப அலுவலகங்களில் 15.01.2015 ற்கு முன்னர் விண்ணப்ப படிவத்தை பெறவேண்டும் 31.03.2015 ற்கு முன்னர் கட்டணங்களை செலுத்தி அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 03 | வீடமைப்பு, நகர சீர்திருத்த கட்டளைச்சட்ட பிரிவு 268 ற்கு அமைவான விடயங்கள் | பொதுமக்கள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்கள் | 3.1.கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், குளாய்க் கிணறுகள் அமைத்தல், புதுப்பித்தல் என்பனவற்றிற்கு அனுமதி பெறவேண்டும். 3.2 அனுமதிக்கப்பட்டு 1 வருடத்திற்குள் கட்டி முடிக்காத கட்டுமானத்துக்கு கால நீடிப்பு பெறப்பட வேண்டும். 3.3.கட்டுமானம் நிறைவடைந்த பின்னர் அமைவு சான்றிதழ் பெறவேண்டும். |
| 04 | துவிச்சக்கர வண்டி உரிமம் | துவிச்சக்கர வண்டி உரிமையாளர்கள் | 31.01.2015 ற்கு முன் கட்டணம் செலுத்தி உரிமம் பெறவேண்டும். |
| 05 | மிருகங்களுக்கான உரிமம் | வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | 31.01.2015 ற்கு முன் கட்டணம் செலுத்தி உரிமம் பெறவேண்டும் |
| 06 | சூழல் பாதுகாப்பு உரிமம் (மத்திய சுற்றாடல் அதிகார சபை 1980 ம் ஆண்டின் 47ம் இலக்க 26ம் பிரிவின் சூழல் பாதுகாப்பு சட்டத்திற்கு அமைய) | 1533/16ம் இலக்க 2008.01.25ம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01ம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் விதந்துரைத்த வியாபாரம்/ தொழில் மேற்கொள்வோர் | உரிய அனுமதிக்கு விண்ணப்பித்து அனுமதியை பெற்றுக்கொள்ளவும், தவறின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 07 | விளம்பரங்கள் அமைத்தல்/ காட்சிப்படுத்தல் | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் | 31.01.2015 ற்கு முன்னர் சபையின் அனுமதியை பெற்றே விளம்பரங்களை காட்சிப்படுத்த வேண்டும் அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும். |
| 08 | வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும் | பாதசாரிகள், வாகன ஓட்டிகள் மற்றும் வியாபாரிகள் | வீதி ஒழுங்கை பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களுக்கு முன்னால் பாதசாரிகள் போக்குவரத்துக்கு இடையூறாக பொருட்கள் காட்சிப்படுத்தல் விற்பனை செய்தல் தடை செய்யப்படுகின்றது. சபையின் பொதுச்சந்தை, இறைச்சி கடைகளிலிருந்து 500 மீற்றர் சுற்றாடலில் மரக்கறிகள், கடலுணவுகள், இறைச்சிகள், உயிருடன் கோழிகள் விற்பது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 09 | கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தல் | கால்நடை வளர்ப்போர் | சபை எல்லைக்குள் அலைந்து திரியும் கட்டாக்காலிகள் கட்டி வளர்க்கப்பட வேண்டும்கட்டி வளர்க்காது விட்டால் சபையால் பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 10 | பொது இடங்களில் கழிவு போடுதலும் டெங்கு நுளம்பு பெருக்கத்துக்கு ஊக்கமளிப்பதும் | பொது மக்கள், வியாபார நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் | திண்ம கழிவுகள் அனுமதிக்கப்படாத இடத்தில் கொட்டுதல் கொண்டு செல்லுதல் ஆகியன தடை செய்யப்படுவதோடு நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 11 | பொது சுகாதாரத்தை பேணுதல் | உணவு கையாளும் நிலையம் மற்றும் பொது மக்கள் | அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்படுவதுடன், உணவு கையாளும் நிலைய பணியாளர்கள் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொது மக்கள் மற்றும் தொடர்புபட்டோரின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்பட தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

03.01.2015

ம.ஜெயகாந்தன், தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேசசபை.


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1123 | திகதி 01.01.2015

வெற்றி எண்கள்: 04 05 31 32 | ஆங்கில எழுத்து: J

ஜக்பொட் பரிசு ரூ. 4,87,09,060/= வெற்றி பெற்றுள்ளார்

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 1 | 4,87,09,060/= | ரூ. 4,87,09,060/= |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 9 | 50,000/= | ரூ. 4,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 262 | 1,000/= | ரூ. 2,62,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 485 | 1,000/= | ரூ. 4,85,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11976 | 60/= | ரூ. 7,18,560/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6244 | 40/= | ரூ. 2,49,760/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 156815 | 20/= | ரூ. 31,36,300/= |
| ஆங்கில எழுத்து | 22746 | 20/= | ரூ. 4,54,920/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,54,65,600/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 10,000,000/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2015.01.05 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3981)

# சிரேஷ்ட தலைமை அலுவலர்களுக்கான நியமனம் வேறெவருக்கும் சாட்டுதல் செய்யமுடியாதவை

## தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர் நியமனத்திற்காக கடிதம் கிடைக்கப்பெற்றவர்கள் இந் நியமனத்தை மறுதலிப்பதோ வேறெவர்க்கும் சாட்டுதல் செய்வதோ இயலாத விடயமாகும்.

இவ்வாறு யாழ்.தெரிவத்தாட்சி அலுவலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.


சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர் ஒருவர் 1981 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 25(1) ஆம் பிரிவிற்கு அமைய நியமிக்கப்படுவார்.

இவ்வாறு நியமனம் பெற்றவர்கள் நியாயமான கால அவகாசத்துடன் முற்கூட்டியே எனக்கு அறிவிக்கவும்.

அரச மருத்துவரால் சான்றுப்படுத்தப்படுவதுமான சுகவீனம் ஒன்றினது அல்லது வேறேதும் நியாயமானதென ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதும் ஆவண ரீதியாக உறுதிப்படுத்தக் கூடியதுமான காரணத்தின் மீது அல்லது தாங்கள் இக்கடமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள மறுப்பது தங்களை உடனடி விளைவுடையதான ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாக்கிவிடும்.

எனவே சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலராக தெரிவு செய்யப்பட்டவர்கள் சகல ஆயத் தங்களுடன் தங்களுக்குரிய சிற்றூழியருடன் எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு யாழ்.தெரிவத்தாட்சி அலுவலர் சு.அருமைநாயகம் கேட்டுள்ளார். (92)

# றெயின்போ மைதானத்தில் மரங்கள் அழிப்பு



வல்வை றெயின்போ மைதானத்தில் பராமரிக்கபடும் நிழல்தருமரங்கள் விஷமிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்னிரவு வல்வை றெயின்போ மைதானத்தில் பராமரிக்கப்பட்டு வரும் நிழல்தருமரங்கள் முறிக்கப்பட்டு கூடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. மேற்படி மைதானத்தின் ஒருபுறம், இந்த மைதானத்தில் விளையாடும் இளைஞர்களால் நிழல்தரு மரங்கள் நாட்டப்பட்டு தொடர்ச்சியாக மிகவும் சிரத்தையாக பராமரிக்கப்பட்டு, தற்போது குறித்த மரங்கள் நிழல்தரும் விருட்சங்களாக காட்சியளிக்கின்றன. கடும் கோடை வெயில்களில் நிழலாக இவை உதவுகின்றன. இவ்வாறான நிலையிலேயே மைதானத்தின் ஒரு புறம் நாட்டப்பட்டு கூடு கட்டி பராமரிக்கப்பட்டு வந்த மரக்கன்றுகள் நேற்றுமுன்தினம் இரவு, விஷமிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளன. உலகளாவிய ரீதியிலேயே மரநடுகைகள் பற்றிய விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படுகின்ற நிலையில், வல்வையில் இதற்கு முன்னுதாரணமாக கொள்ளப்படவேண்டிய குறித்த இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றமை வருந்தத்தக்கது என நலன்விரும்பிகள் சிலர் கவலை தெரிவித்துள்ளனர்.

# ஓய்வூதியர்களுக்கு இலவச கைபேசி வழங்கவுள்ளது மொபிடெல் நிறுவனம்

ஓய்வூதியம் பெறுவோருக்கு மொபிடெல் நிறுவனம் கையடக்கத் தொலைபேசியை இலவசமாக வழங்கவுள்ளது என மொபிடெல் நிறுவன நிறைவேற்று அதிகாரி ரஞ்ஜித் ஜீ.ரூபசிங்க அறிவித்துள்ளார்.

ஓய்வூதியதாரர்கள் தமது நவீன தொழில்நுட்பத்தின் அனுகூலங்களை அனுபவிப்பதற்கும் உரிய திட்டமான அதனை யதார்த்தமாக்கிவிடுவதன் நிமித்தம், ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் மொபிரெல் நிறுவனம் இணைந்து ஏற்பாடு செய்திருக்கும் m cash ஊடாக ஓய்வூதியத்தைப் பெறுவதற்கான செயற்றிட்டம் ஒன்று, தேசிய ஓய்வூதிய தினமான 2014 ஒக்ரோபர் மாதம் 09 ஆம் திகதியன்று ஜனாதிபதியினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இப்பணித்திட்டத்தின் மற்றுமொரு படிமுறையாக ஓய்வூதியர்கள் தேசத்தின் பால் ஆற்றிய மகத்தான சேவையைப் பாராட்டி, கையடக்கத் தொலைபேசியூடாக இலவச அழைப்பு நேரம் மற்றும் m cash ஊடாக இலவசமாகப் பெற்றுத்தரப்படும் பல்வேறு சேவைகள் அடங்கிய (நன்றிக்கடன்) என்னும் விசேட பொதியொன்றும் மொபிடெல் நிறுவனத்தினால் ஓய்வூதியக்காரர்களுக்காகவே வழங்கப்படும் எனப்தை மொபிரேல் நிறுவனம் அறிவித்துள்ளது.

இவ் விசேட பொதியினை தேசிய இளைஞர் சேவைகள் டின்றத்தின் அதிகாரிகள் அல்லது மொபிரேல் நிறுவனத்தின் அங்கத்தினர்கள் ஓய்வூதியக்காரர்களின் வீட்டுக்கே வந்து கையளித்து, உரிய ஆவணங்களை நிரப்புவதற்கு உதவி செய்வதுடன், m cash சேவையினை பயன்படுத்தும் முறைகளையும் அறிவுறுத்துவார்கள், மேலும் இப் பிரதிநிதிகள், குறித்த நிறுவனங்களினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையைத் தரித்திருப்பவர்கள் ஓய்வூதியர்கள் இவ் விசேட பொதியினை தெரிவு செய்யப்பட்ட மொபிடெல் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி அல்லது மொபிடெல் கிளை அதிகாரியினால் ஓய்வூதியரின் புகைப்படம் ஒன்று எடுக்கப்படும். இதர தேவையான ஆவணங்களாக ஓய்வூதியக் கட்டணப் பிரதி மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி, ஓய்வூதியரின் முகவரியை உறுதிப்படுத்துவதற்கான (முகவரி அடங்கிய பாவனைக் கட்டணம்) பட்டியல்கள் சுய அடையாள குறியீட்டு இலக்கம் என்பன தேவைப்படுகின்றன என மொபிடெல் (தனியார்) நிறுவன பிரதான நிறைவேற்றதிகாரி ரஞ்ஜித் ஜீ.ரூபசிங்க அறிவித்துள்ளார். (137)



கொக்குவில் ஆடியபாதம் வீதியில் உள்ள ஆழமானதும், நீண்டதுமான மழைநீர் வழிந்தோடும் கால்வாயில் பற்றைகள், புல்லுகள் நிறைந்து காணப் படுகின்றன. (137)

# அப்படியென்றால்...



## மாவை சொல்கிறார்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கட்டுப்பாட்டை மீறுகின்றவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக அவர்கள் கூட்டமைப்பிலிருந்து நீக்கப்பட்டு அவர்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் வகிக்கின்ற பதவிகளும் பறிக்கப்படும்.

தமிழ் மக்களுக்கு யார் துரோகம் இழைத்தாலும் அதை நாம் அனுமதிக்க மாட்டோம்.

## அப்படியென்றால்

கட்சி எப்படி நடந்து கொண்டாலும் அதையெல்லாம் ஏற்றுக்கொண்டு வாயைப் பொத்திக்கொண்டு, கையைக் கட்டிக்கொண்டு பேசாதிருந்து விட வேண்டும்.

நல்லாயிருக்கு ஜனநாயகத்தின் விறுத்தம்.

ஜனநாயகத்தைப் பற்றி யாராவது படிப்பதாக இருந்தால் அதை மாவை சேனாதிராஜாவிடம் படித்துக்கொள்ளலாம்.

இதுதான் சர்வாதிகாரம் என்பது. ஒரு காலத்தில் இயக்கங்கள் இப்படித்தான் தங்கள் உறுப்பினர்களை அச்சுறுத்திக் கட்டுப்பாடுகளைப் போட்டு வைத்திருந்தன. தாம் என்ன செய்தாலும் அதையெல்லாம் ஏற்றுக்கொள்ள வேணடும். அதற்கு எதிராக எவரும் கதைக்கக் கூடாது. அமைப்பை விட்டு வெளியேறக்கூடாது.

இவற்றை மீறுவோர் மரணதண்டனை விதிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

இப்பொழுது மாவையின் கையில் துப்பாக்கி இல்லை. ஆனால் அவருடைய மண்டையிலும் மனசிலும் சர்வாதிகாரக் குண்டுகள் தாராளமாக உள்ளன. அதனை வைத்து அவர் நேர்மையாகச் சிந்திப்போரை மிரட்டுகிறார்.

கட்சியை விட்டு யார் விலகினாலும் அவர்கள் துரோகிகள் என்று முத்திரை குத்தவே விரும்புகிறார்.

என்ன மாதிரியான ஒரு பிழைப்பும் அநீதியும் இது.

## குறிப்பு

1. மாவை செய்யாத துரோகத்தையா... அல்லது மாவையின் அணியில் உள்ள மூத்த தலைவர்கள் செய்யாத துரோகத்தையா இந்தப் புதியவர்கள் செய்கிறார்கள்?
2. தலைவர்கள் தவறு செய்தால் அதைத் தட்டிக் கேட்க முடியாது என்றால் வேறு என்ன செய்ய முடியும்? கட்சிக் கட்டுப்பாடு என்று சொல்லிக் கொண்டு வாளாவிருந்து விட முடியுமா?
3. கட்சிக்கு விசுவாசமாக இருப்பதா? அல்லது மக்களுக்கு விசுவாசமாக இருப்பதா?

## அபிப்பிராயம்

சர்வாதிகாரம் – ஏகப்பிரதிநிதித்துவம் எல்லாம் அந்த மாதிரித்தானிருக்கு.

தமிழ்த்தேசியம் என்பது இப்படித்தான் ஜனநாயகத்துக்கு விரோதமாக – சுதந்திரத்துக்கு எதிரானதாக எப்போதும் உள்ளது.

- ம.அய்யம்பிள்ளை -

உங்கள் நம்பிக்கையை பணத்தின் மீது வைக்காதீர்கள். பணத்தை நம்பிக்கையான இடத்தில் வையுங்கள். - பெர்னாட்ஷா.

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வாங்கிய காசுக்கு கூவுதல்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களான அனந்தி, ரவிகரன் போன்றோர் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபாலவுக்கு ஆதரவு தெரிவிப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவுக்கு பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

"சமஷ்டி இல்லை.... ராணுவம் வாபஸ் இல்லை.... காணிகள் படையினர் தேவைக்குப் போக மிஞ்சியதுதான் திருப்பித் தரப்படும்...." என்று மேடைக்கு மேடை வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிற எதிரணிக்கு வாக்குப் போடச்சொல்லி மக்களிடம் போய் எப்படிச் சொல்ல முடியும் என்று தமிழரசுக் கட்சிக்குள்ளேயே பலர் தனிப்படப் பேசுகையில் குமுறுகின்றனர்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளாத் தீர்மானத்தை சம்பந்தனும் சுமந்திரனும் மாவையும் எப்படி தமிழ் தேசிய கூட்டமைப்பின் தீர்மானமாகச் சொல்ல முடியும் என்று அந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டை மீறுகிறவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக அவர்கள் கூட்டமைப்பிலிருந்து நீக்கப்படுவர் என எதேச்சதிகாரத் தொனியில் எச்சரிக்கை விடுத்திருக்கிறார் மாவை சேனாதிராசா.

நாட்டில் ஜனநாயகத்தை மலர்விப்பதற்காகவே மைத்திரியை ஆதரிக்கிறோம் என்று சொல்பவர்களின் கட்சிக்குள் ஜனநாயகம் இந்தளவில்தான் இருக்கிறது.

மைத்திரியை ஆதரிக்கப்போவதாக கூட்டமைப்புத் தலைமை எடுத்த முடிவு தவறானது என்று கருத்து தெரிவித்த மாகாண சபை உறுப்பினர் அனந்தியை மாவை சேனாதிராசா தொலைபேசியில் தொடர்புகொண்டு ஏசியதாகவும் அனந்தி மயக்கம் போட்டு விழுந்ததாகவும் நேற்றைய செய்திகள் கூறின.

இந்தச் செய்தியைப் பார்த்துவிட்டு ஊடக நண்பர் ஒருவர் கூறினார்: "நல்லவேளை தமிழரசுக் கட்சியினர் கையில் ஆயுதங்கள் இல்லை" என்று. தேவையில்லை.... வன்முறை அவர்களது வாயிலிருந்தே ஆரம்பமாவதை அண்மையில் நடந்த யாழ் ஒருங்கிணைப்புக்குழு கூட்ட வீடியோ காட்சிகளைப் பார்த்தவர்கள் தெரிந்துகொண்டிருப்பர்.

எதிரணி வேட்பாளரை ஆதரிப்பது என்னும் முடிவு கூட்டமைப்பிலுள்ள மூன்று பேரது முடிவுதான் என்பதும் அதுவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவாக அவர்களால் தன்னிச்சையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதும் புலனாகிறது.

கூட்டமைப்பிலுள்ள மற்றவர்களைச் சரிக்கட்டவே எதிரணித் தலைவர்களிடமிருந்து வாங்கிய பணத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். பணத்தைப் பட்டுவாடா செய்கையில் ஏற்பட்ட பிரச்சினையே விஷயத்தை அம்பலமாக்கிவிட்டது.

இவர்கள் வாங்கிய பணத்துக்காக மைத்திரிக்கு வாக்களிக்கும்படி இங்கே கூவிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை செப்பமிட்டதாகச் சொல்லப்படும் ஹெல உறுமய "13ஆவது திருத்தத்திற்கு அப்பால் செல்லவோ மாகாண சபைகளை இதற்கு மேலும் பலப்படுத்தவோ இடமில்லை" என்று தெளிவாக அறிவிக்கிறது.

"எதிரணி ஆட்சியைக் கைப்பற்றினால், படையினரைப் பாதுகாப்போம்; வடக்கிலிருந்து விலக்க மாட்டோம்; எஞ்சியுள்ள புலி உறுப்பினர்களைக் கைதுசெய்து நடவடிக்கை எடுப்போம்" என்றெல்லாம் மைத்திரிபாலவின் தேர்தல் அலுவலகத்தில் வைத்தே செய்தியாளர்களுக்குச் சொல்கிறார் சம்பிக ரணவக்க.

"வடக்கில் படைமுகாம்கள் எதுவும் அகற்றப்பட மாட்டாது" என்று நேற்றைய புத்தளக் கூட்டத்திலும் அழுத்தம் திருத்தமாக உரைக்கிறார் மைத்திரிபால. சமஷ்டி இல்லை, படையினருக்குத் தேவையான காணிகளை திருப்பித் தரப்போவதில்லை என்றெல்லாம் தெளிவாகவே சொல்கிறார்.

அவர்தான் இந்த நாட்டுக்குத் தலைவராக வரவேண்டும் என்று நமது மக்களுக்குச் சொல்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.... எதற்காக?

- ஆசிரியர்

# கைபேசியூடான பிரசாரத்தை தவிர்க்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் அறிவுறுத்தல்

(கொழும்பு)

தொலைபேசி மூலமான பிரசாரங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

வாடிக்கையாளர்களின் ஒப்புதல் இன்றி இவ்வாறான பிரசாரங்கள் தவிர்க்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தேர்தல் நடத்தப்படுவதற்கு 48 மணித்தியால்ங்களுக்குள் செய்யப்படும் இவ்வாறான தொலைபேசிப் பிரசாரங்கள் சட்டத்திற்கு புறம்பானது என அவர் தெரிவித்துள்ளார்.

தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் குறுஞ்செய்தி மூலம் சட்டவிரோத பிரசாரம் செய்யப்படுவதாக முறைப்பாடு கிடைத்துள்ளது என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## சுதந்திரமான தேர்தலை நடத்த வழியை ஏற்படுத்த வேண்டும்

### ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை

இலங்கைப் பிரஜைகள் வன்முறைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் இன்றி சுதந்திரமாக தங்களது தலைவர்களை தெரிவு செய்ய சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அமைதியானதும் வெளிப்படையானதுமான முறையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமெனவும் ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலின் நம்பகத் தன்மைக்கு அமைதியான சூழ்நிலை மிகவும் அவசியமானது என அது சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் ஜனநாயக மரபினை உறுதி செய்ய வேண்டிய கடப்பாடு அனைத்து தரப்பினரையும் சாரும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை மூலம் சுட்டிக்காட்டியுள்ளது.

## குழுக்களுக்கிடையே மோதல்: மூன்றுபேர் கைது

அஹங்கம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரசாரத்தின் போது, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இசை நிகழ்ச்சியில் இரண்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் மூன்று பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கிடையில் மீறிகம - கொஸ்ஹேன பிரதேசத்தில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில காயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மரணமானார். இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் இதனை குறிப்பிட்டுள்ளது. பலியானவர் கொஸ்ஹேன பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதான இளைஞன் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 36 வயதான ஒருவரும் 24 வயதான ஒருவரும் மீறிகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# அச்சல ஜாகொட எம்.பி மைத்திரிக்கு ஆதரவு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அச்சல ஜாகொட எதிரணி பொது வேட்பாளருடன் இணைந்து கொண்டார்.

இதன்படி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அவர் ஆதரவளிக்கவிருப்பதாக அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினராக 2004 ஆம் அண்டு முதன் முதலில் நாடாளுமன்றத்துக்கு தெரிவான அவர், பின்னர் அமைச்சர் விமல் வீரவன்சவுடன் தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினராக செயற்பட்டு வந்தார்.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அச்சல ஜாகொட தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவானார்.

சிறிதுகாலம் அவர் சுற்றுலாத்துறை பிரதி அமைச்சராகவும் இருந்தார்.

அதன் பின்னர் தேசிய சுதந்திர முன்னணியில் இருந்து விலகி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் உறுப்பினராக செயற்பட்டு வந்தார்.

இதேவேளை முன்னாள் பிரதி அமைச்சரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான வீ.புத்திரசிகாமணியும் எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதாக நேற்று அறிவித்துள்ளார்.

அத்துடன் ஹிரியால மற்றும் குருணாகல பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் 3 பேரும் பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தனர்.

## 8 ஆம் திகதி நள்ளிரவு நாடாளுமன்றம் கலைக்கப்படும்

(கொழும்பு)

ஜனவரி 8ஆம் திகதி நள்ளிரவில் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முடிவுசெய்துள்ளது என்று தெரியவருகிறது.

நடைபெறவுள்ள தேர்தலில் தமக்கு தோல்வி ஏற்பட்டால் சுதந்திரக் கட்சியை சந்திரிகா கைப்பற்றிவிடுவார் என்று கட்சி வட்டாரங்களுக்குள் எழுந்த சந்தேகத்தை அடுத்து தேர்தல் முடிவுகள் வெளியாவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தை கலைத்துவிட கட்சியின் உயர் பீடத்தினர் ஆலோசித்து வருகின்றனர் என்று தெரியவருகிறது.

## இலங்கையின் தேர்தல் குறித்து கண்காணிப்பில் அவுஸ்ரேலியா

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலை அவுஸ்ரேலியா மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை அந்நாட்டு இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ளது.

இலங்கையில் புதிய அரசாங்கம் ஒன்று அமையுமாக இருந்தால், அது இலங்கைக்கும் அவுஸ்ரேலியாவுக்கும் இடையிலான படகு பயணிகளை தடுக்கும் உடன்படிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்ற சநதேகம் அவுஸ்ரேலியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் அவுஸ்ரேலிய அரசாங்கத்திற்கு முக்கியமானதாக அமைந்துள்ளதாகவும் அந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

# சிறந்த நிர்வாகம் எங்களிடம் உள்ளது

## ஜனாதிபதி தெரிவிப்பு

30 வருடங்களாக இடம்பெற்ற கொடிய யுத்தத்தை நான்கு வருடங்களில் நிறைவுக்கு கொண்டு வந்தமைக்கு நாட்டில் காணப்பட்ட சிறந்த நிர்வாகமே காரணம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சிறந்த நிர்வாகம் இருந்திருக்குமாயின் 30 வருடங்களாக இடம்பெற்ற யுத்தத்தை நிறைவு செய்திருக்க முடியுமே ஏன் முடியவில்லை.

எங்களிடம் சிறந்த நிர்வாகம் இருந்த காரணத்தினாலேயே 30 வருடங்களாக இடம்பெற்ற யுத்தத்தை 4 வருடங்களில் நிறைவு செய்தோம் எனக் குறிப்பிட்டார்.

# காளை மாட்டிற்கு தானியம் வைத்து பசு மாட்டிடம் பால் கேட்டு அறிக்கை விடலாமா?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையில் வாழும் தமிழர்கள் மிகவும் கவனமாக சிந்தித்து வாக்களிக்கவேண்டும் என்ற கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்களது வாக்குகள் சமூகத்தின் - நாட்டின் எதிர்காலத்தை திர்மானிப்பவை மட்டுமல்ல தனிமனிதர்களின் எதிர்காலத்தையும் வரையறுப்பவை. இலங்கைவாழ் தமிழர்களின் தவறுகளை சுட்டிக்காட்டுவதற்கு இது தருணமல்ல என்றாலும் கடந்தகாலத்தை இலகுவில் கடந்து போக முடியாது. மறந்துவிடவும் முடியாது.

77இல் கொழும்புத் தமிழர்கள் மலையகத்தமிழர்கள் நூறு வீதமாக ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களித்தார்கள் அதேவேளையில் வடகிழக்கில் தமிழர்கள் ஈழக் கோரிக்கையை ஆதரித்து பிரிவினை கேட்ட கட்சிக்கு வாக்களித்தார்கள். இதனால் நடந்த அனர்த்தங்களுக்கு கட்சி மற்றும் இயக்கத் தலைமைகள் மட்டுமல்ல சாதாரண வாக்காளர்களும் பொறுப்பாளிகளாகிறார்கள். வடக்கில் தனி ஈழம் கோரியதால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த தமிழர்கள்மீது ஐக்கிய தேசியக் கட்சி அரசே 77 இல் வன்முறையை உடனடியாக அவிழ்த்து விட்டது.' அக்காலத்தில் எந்தவொரு ஆயுதம் ஏந்திய தமிழ் இயக்கங்களும் இல்லை.

77இல் தமக்கு கிடைத்த வடகிழக்கின் வாக்குகளை பிரிவினைக்கு அளிக்கப்பட்ட வாக்குகளாக கருதி தமிழ்த்தலைவர்களும் விடுதலை இயக்கங்களும் 30 வருடங்களாக ஒரு புள்ளடியைக் காரணம் காட்டி நரகத்தை நோக்கி தமிழ் மக்களை அழ அழ தரதரவென இழுத்துசென்றார்கள்.

பதவிக்காலம் நீடிப்பதை மறுத்து தேர்தலை நடத்துகிறார்.

தன்மீதான அதிருப்தி மக்களிடம் இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ளுவதற்கான சகல வசதிகளையும் கொண்டவர் அவர். இலங்கையில் தற்காலத்தில் புலனாய்வுப்பிரிவு முன்பிலும் பார்க்க சிறப்பாக இயங்குகிறது. அதனையும்விட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளைகள் ஏனைய எந்தக் கட்சிகளையும் விட தென்னிலங்கையில் பரந்துபட்டு உள்ளது. அவற்றின் கடிவாளத்தை வைத்திருப்பவர் அமைச்சர் பசில் ராஜபக்'. இவர்களால் நாட்டு மக்களின் மனநிலையை அறிந்து கொள்ள முடியும்

தற்போதைய அரசாங்கத்திலும் பார்க்க எதிரணியில் இருப்பவர்கள் ஜனநாயக வாதிகள் - சிறுபான்மையினர்மீது அக்கறை கொண்டவர்கள் என்பதற்கு ஏதும் உத்தரவாதம் இருக்கிறதா?

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக போட்டியிடுபவர்கள் தமிழர்களுக்குரிய எதிர்காலத்தை தற்போதைய நிலையிலும் பார்க்க உயர்த்துவதற்கான

**தற்போதைய அரசாங்கத்திலும் பார்க்க எதிரணியில் இருப்பவர்கள் ஜனநாயகவாதிகள் — சிறுபான்மையினர்மீது அக்கறை கொண்டவர்கள் என்பதற்கு ஏதும் உத்தரவாதம் இருக்கிறதா? மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக போட்டியிடுபவர்கள் தமிழர்களுக்குரிய எதிர்காலத்தை தற்போதைய நிலையிலும் பார்க்க உயர்த்துவதற்கான கொள்கையை கொண்டவர்களா? கடந்த காலத்தில் இந்த எதிரணிக்கூட்டு முன்னணியில் அங்கம் வகிப்பவர்கள் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் நடந்து கொண்ட முறைகள் எப்படி இருந்தன?**

மாற்றுகிறார்கள். சிறிய அற்ப விடயங்களை அவர்கள் கவனத்தில் எடுப்பதில்லை. ஆனால் தமது அன்றாட வாழ்விற்கு எது மிக முக்கியமானதோ அதனைவைத்தே தீர்மானங்களுக்கு வருகிறார்கள்.

இப்படியாக சிங்கள மக்கள் செயற்படுவதன் காரணம் - அவர்கள் கிராமங்களில் பெரும்பான்மையாக வசிப்பதனால் மட்டுமல்ல அங்கு தங்களைப் பாதிக்கும் செயல்களை மிகவும் எளிதாக தெரிந்தால் மட்டுமே தீர்மானங்களுக்கு வருகிறார்கள்.

இதை விட மகிந்த ராஜபக்ஷ முதன் முறை பதவிக்கு வந்தபோது சாதாரண மக்கள் இரண்டாக பிரிந்தார்கள். எனினும் அவர்களுக்கு இடையே பெரிய வேறுபாடு இருக்கவில்லை. ஆனால் அதற்கு அக்காலத்தில் விடுதலைப்புலிகள் உதவினார்கள். அடுத்தமுறை அவர்கள் - போரை முடிவுக்கு கொண்டுவந்ததால் அதற்கு நன்றிக்கடனாக மகிந்த ராஜபக்'வுக்கு வாக்களித்தார்கள்.

இம்முறை தற்போதைய அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் அலையுள்ளதா? என்ற கேள்விக்கு இல்லை என்ற பதில்தான் கிடைக்கிறது. மேலும் போரில் வென்றதுடன் நில்லாமல் தற்போதைய அரசாங்கத்தில் இலங்கையில் எந்தக்காலத்திலும் நடக்காத நிர்மாணப்பணிகள் நடந்துள்ளதை அரசாங்கத்தை எதிர்ப்பவர்களும் ஏற்றுக்கொள்வார்கள்.



**இலங்கை அரசாங்கம் மட்டுமல்ல எந்த நாட்டிலும் தேசப்பிரிவினையை எதிர்த்து எந்தவொரு அரசாங்கமும் யுத்தம் நடத்தியிருக்கும். சண்டையை ஆரம்பித்துவிட்டு பலமாக அடித்துவிட்டான் என சிறுவர் பாடசாலைகளில் அழும் சிறுவர்கள்போல் புலம்பமுடியாது. பிரிவினைக்காக ஆயுதம் தூக்கியபோதே முள்ளிவாய்க்கால் அவலம் போன்ற சம்பவத்தை எதிர்பார்த்திருக்க வேண்டும். அதற்கு உலக வரலாற்றில் பல சம்பவங்கள் உதாரணமாக உள்ளன.**

## நடேசன்

இலங்கை அரசாங்கம் மட்டுமல்ல எந்த நாட்டிலும் தேசப்பிரிவினையை எதிர்த்து எந்தவொரு அரசாங்கமும் யுத்தம் நடத்தியிருக்கும். சண்டையை ஆரம்பித்து விட்டு பலமாக அடித்துவிட்டான் என சிறுவர் பாடசாலைகளில் அழும் சிறுவர்கள்போல் புலம்ப முடியாது. பிரிவினைக்காக ஆயுதம் தூக்கியபோதே முள்ளிவாய்க்கால் அவ்லம் போன்ற சம்பவத்தை எதிர் பார்த்திருக்க வேண்டும். அதற்கு உலக வரலாற்றில் பலசம்பவங்கள் உதாரணமாக உள்ளன.

இந்த முறை இலங்கை ஜனாதிபதி இரண்டு வருடங்கள் தனது

கொள்கையை கொண்டவர்களா? கடந்த காலத்தில் இந்த எதிரணிக்கூட்டு முன்னணியில் அங்கம் வகிப்பவர்கள் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் நடந்து கொண்ட முறைகள் எப்படி இருந்தன?

இந்த இரண்டு கேள்விகளும் அதிகம் சிக்கலானவையல்ல. மூளையைக் குடைந்து பதில் தேடவேண்டியவை அல்ல. எந்த மூடர்களுக்கும் புரியும். இதற்கும் அப்பால் முழு இலங்கையின் விடயத்தை 74 வீதமான சிங்கள மக்களே தீர்மானிப்பார்கள் என்பது நமக்குத் தெரிந்த விடயம். கடந்த காலங்களில் அவர்களது செய்கைகளைப் பார்த்தால் பெரும்பாலான காலங்களில் அந்த அந்தக்

காலத்திற்குப் பொருத்தமானவர்களையே அவர்கள் தெரிவு செய்திருக்கிறார்கள்.

நான் அறிந்தவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசு எழுபதுகளில் உணவுப் பஞ்சத்தை மக்கள் மீது திணித்தமையினால் 77 இல் நாடு தழுவியரீதியில் மக்கள் மிகப் பெரும்பான்மையாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தார்கள்.

அதன் பலனை தமிழர்கள் 77 - 81 - 83 இல் அனுபவித்தார்கள். இக் காலப்பகுதியில் இலங்கை மக்கள் தொடர்ச்சியாக விடுதலைப்புலிகள் மற்றும் ஜே.வி.பி முதலானவற்றின் ஆயுதமுனைத் தாக்குதல்களுக்கும் முகம்கொடுத்தார்கள்.

இக்காலங்களில் பெருந்தொகையான சிங்கள மக்களும் கொல்லப்பட்டார்கள். 89 இல் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களும் கொல்லப்பட்டார்கள். அதன்பின்பு சமாதானத்தை நாடிய மக்கள் நாடுதழுவிய ரீதியில் சந்திரிகாவுக்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்தார்கள். இவ்வாறு இரண்டு பிரதான கட்சிகளும் நாடுதழுவிய ரீதியில் மக்கள் ஆதரவு பெற்று பின்னர் மக் களாலேயே நாடு தழுவிய ரீதியில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் தூக்கி வீசப்பட்டன.

இவற்றிலிருந்து நமக்குக்குக் கிடைக்கும் செய்தி தெளிவானது. பெரும்பான்மையின சிங்கள மக்கள் மிகவும் அவதானிப்புடனேயே அரசுகளை

போக்குவரத்து துறையில் நடந்த கட்டுமானப் பணிகள் சாதாரண விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் நேரடியாகவே வருமானத்தை அளிக்கிறது. உலகெங்கும் பண நெருக்கடியான காலத்தில் இலங்கையில் போர் முடிந்தது. மேற்கு நாடுகள் எல்லாம் தங்கள் மக்களை எப்படிப் பார்த்துக் கொள்ளலாம் என திணறிய காலத்தில் இலங்கையில் சீனாவின் உதவியுடன் பல அபிவிருத்தித் திட்டங்கள் நடந்தன.

சாதாரண விவசாயிகளுக்கு உரமானியம் - மீனவர்களுக்கு எரிபொருள் மனியம் - என பெரும்பான்மை சிங்கள மக்களை பட்டினியில் இருந்து பாதுகாக்கும் பல திட்டங்கள். சிங்கள மக்கள் நன்றியுணர்வும் ஏகாதிபத்திய எதிர்ப்பும் கொண்டவர்கள். வெளிநாடுகளின் தலையீட்டையும் எதிர்த்து தலையீட்டை ஆதரிப்பவர்களுக்கும் எதிரானவர்கள்.


இந்த நிலையில் உணர்வு ரீதியாக வாக்களித்து வேலிக்கு வெளியால் நிற்கப் போகின்றோமா?... அறிவு ரீதியாக சிந்தித்து வாக்களிப்பது இலங்கையில் வாக்குரிமை கொண்ட தமிழர்கள் தீர்மானிக்கவேண்டியது.

கடந்த தடவை தமிழ்த்தரப்பு காளை மாட்டிற்கு தானியத்தை வைத்துவிட்டு பசுமாட்டிடம் பால்கேட்டு அறிக்கை விட்டது. ஆனால் இம்முறையும் அதையே தமிழ்த் தலைவர்கள் தரப்பு செய்தாலும் தமிழ் மக்கள் அதனைச் செய்யக்கூடாது என்பதுதான் எனது ஆவல்.

# தேர்தல் கடமைகளில் 71 ஆயிரம் பொலிஸார்

# விரிவுபடுத்தப்படும் பாதுகாப்பு நடவடிக்கை

## பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தகவல்



நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் 5 ஆயிரம் விசேட அதிரடிப்படை உட்பட 71,100 பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இவர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் தேர்தல் கடமையில் ஈடுபட இருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் தலா மூன்று பொலிஸார் வீதம் கடமையில் ஈடுபடுத்தப்பட இருப்பதாக கூறிய அவர், அவசர சந்தர்ப்பத்தில் பயன் படுத்துவதற்காக சகல பொலிஸ் பிரிவிலும் விசேட கலகமடக்கும் படையினர், தயார் நிலையில் வைக்கப்படுவர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விளக்கமளிக்கும் விசேட ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த அவர், 66,100 பொலிஸாரும் 5000 அதிரடிப் படையினரும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர். அண்மைக்காலத்தில் தேர்தலில் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்ட கூடுதல் தொகை இதுவாகும். நாடுமுழுவதிலும் உள்ள 12,252 வாக்களிப்பு நிலையங்களுக்கும் ஆயுதம் தாங்கிய தலா 2 கொன்ஸ்டபிள்கள் உட்பட மூவர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படுவர்.

49 வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு வெளியிலும், விசேட அதிரடிப்படையினர் கடமையில் நிறுத்தப்படுவர். இது தவிர 5ஆம் திகதி முதல் நாடு முழுவதிலும் 417 வீதி சோதனை சாவடிகள் அமைக்கப்படும். 55 முழுமையான கலகமடக்கும் பொலிஸ் பிரிவுகளும் 97 பாதி கலகமடக்கும் பிரிவுகளும் கடமையில் ஈடுபடுத்தப்படும்.

நாடுமுழுவதிலுமுள்ள 443 பொலிஸ் நிலையங்களுக்கும் என உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு மேற்பட்ட பதவி வகிக்கும் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவார். தேர்தல் முடிவடைந்த ஒருவாரம் வரை பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

43 பொலிஸ் பிரிவுகளிலும் சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர், பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் கீழ் விசேட அதிரடிப்படையினர் தயார் நிலையில் வைக்கப்படுவர். தேர்தல் பிரசார பணிகள் 5 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடைவதால் அதன் பின்னர் பிரசாரங்கள் மேற்கொள்வது முற்றாக தடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

68 ஆயிரம் பொலிஸார் 6ஆம் திகதி முதல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர். 5ஆம் திகதிக்குப் பின்னர் ஊர்வலங்கள், வாகன பேரணி என்பன தடை செய்யப்பட்டுள்ளதோடு இதனை மீறுவோருக்கு எதிராக வழக்கும் தொடரப்படும் என அவர் தெரிவித்தார்.

# மைத்திரியை கைது செய்யவேண்டும் கோரிக்கை விடுக்கிறது பொதுபலசேனா



(கொழும்பு)

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை கைது செய்ய வேண்டுமென பொதுபல சேனா கோரிக்கை விடுத்துள்ளது. நாட்டுக்கு எதிராக சூழ்ச்சித் திட்டம் தீட்டிய குற்றச்சாட்டின் அடிப்படையில் மைத்திரிபால சிறிசேனவை கைது செய்ய வேண்டுமென பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் கோரியுள்ளார்.

சரத் பொன்சேகாவை வைத்து இந்த சூழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்ள முயற்சித்தனர். அது வெற்றியளிக்கவில்லை. அதன் பின்னர் 2011ஆம் ஆண்டு முதல் பிரிவினைவாத இருள் சூழ்ந்த சக்திகள் பல்வேறு வழிகளில் நாட்டுக்கு எதிராக சூழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. உள்ளேயும் வெளியேயும் சூழ்ச்சி செய்யப்பட்டுள்ளதாக மைத்திரிபால சிறிசேன சொல்கின்றார். அப்படியென்றால் மைததிரிபால சிறிசேனவை கைது செய்ய வேண்டுமென கலகொடத்தே ஞானசார தேரர் அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

# போதைப்பொருள் வர்த்தகம் யுவதி பொலிஸாரால் கைது



(கொழும்பு)

தெமட்டகொட பிரதேசத்தை இலக்கு வைத்து ஹெரோயின் வர்த்தகத்தில் ஈடுபட்ட யுவதியொருவரை மூன்று இலட்ச ரூபாவுக்கு அதிகமான பெறுமதி கொண்ட ஹெரோயினுடன் கைதுசெய்ததாக மேல் மாகாண போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர் தெரிவிக்கின்றனர்.


போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலொன்றை அடுத்து சந்தேக நபரை வேலுகாராம வீதியில் வைத்து கைது செய்தனர்.

25 வயதான யுவதி இதற்கு முன்னரும் ஹெரோயின் வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றத்திற்காக கைது செய்யப்பட்டவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் நீதிமன்றத்தின் அனுமதியின் பேரில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

# மாகாணசபை அதிகாரங்களை குறைத்தால் அரசுக்கு ஆதரவு

## சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறைத்தால் அவருக்கு ஆதரவளிக்க தயார் என ஜாதிஹ ஹெல உறுமயவின் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மாகாணசபையொன்றை இன்னொரு மாகாணசபையுடன் இணைப்பதற்குள்ள அதிகாரத்தை குறைக்குமாறும், ஆளுநரின் அதிகாரத்தை அதிகரிக்குமாறும் நாங்கள் ஜனாதிபதியிடம் முன்னர் கேட்டிருந்தோம்.

ஆனால் அவர் அதற்கு தயாரில்லை, தற்போதாவது அவரால் அதனை செய்யமுடியுமா என நாங்கள் கேட்கிறோம். ஆனால் தற்போதைய அரசாங்கம் எமது கோரிக்கையை நிறைவேற்றாது என்றே தோன்றுகின்றது. எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொய்யான குற்றச்சாட்டுக்கள் கவலையளிப்பதாக உள்ளன

## ரவூக் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திடம் இருந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவது தமது கட்சியும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்கப் போவதாக தீர்மானித்தமையினாலேயே என,ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு ஒன்றிணைந்த ஆட்சி என்ற கோரிக்கையை முன்வைக்க தமது கட்சிக்கு எந்தவொரு தேவையும் இல்லை எனவும், தமக்குத் தேவை நல்லாட்சியே எனவும் அவர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தில் இருந்து விலகியதன் பின்னர், பல்வேறு பொய்யான குற்றச்சாட்டுக்கள் தம் மீது சுமத்தப்படுவதாகவும்



ரவூப் ஹக்கீம் இதன்போது மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் கவலையளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# இயற்கை அனர்த்தங்களால் 6,500 வீடுகள் முழுமையாக சேதம்



(கொழும்பு)

கடந்த காலங்களில் நிலவிய அசாதாரண காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளம்- மண்சரிவு- அணை உடைத்தல் உட்பட பல்வேறு அனர்த்தங்களின் காரணமாக 6,500 வீடுகள் முழுமையாகவும் 18013 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மட்டும் 5172 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன.

இவ்வனர்த்தத்தினால் இடம் பெயர்ந்த மக்கள் தற்போது மீண்டும் சொந்த இடங்களுக்கு திரும்பிய வண்ணம் உள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் 29ஆம் திகதி வரையில் 621 பாதுகாப்பான இடங்களில் 33915 குடும்பங்களைச் சேர்ந்த 117544 பேர் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் இடைத்தங்கல் முகாமகள் 363 ஆகவும் தங்கியிருப் போர் எண்ணிக்கை 50832 ஆகவும் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பான இடங்களில் உள்ள மக்களுக்கான சமைத்த உணவு- மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை அந்தந்த மாவட்ட செயலாளர்களினூடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக அரசாங்கம் 1000 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

தெற்கு- மேற்கு- சப்ரகமுவ- ஊவா- வடக்கு - வடமேற்கு- கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்கள் இவ்வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் இதனால் 39 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 20 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்தங்களினால் இலங்கையில் 311,623 குடும்பங்களைச் சேர்ந்த 1121579 பேர் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 3,100 பேருக்கு நியமனம்



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த நவம்பர் மாதம் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்ட ஆலோசனைக்கிணங்க இராணுவ சிவில் சேவையாளர்கள் 3100 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இராணுவ தலைமையகத்தில் நடைபெற்றது.

இராணுவ தளபதி லெப்டினனட் ஜெனரல் தயார ரத்நாயக்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பாதுகாப்புப் படையின் கட்டளைத் தளபதிகள் உட்பட பாதுகாப்புப்படையின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.







இளவாலை அப்போஸ்தலசபையின் ஒளிவிழா அண்மையில் நடைபெற்றது. இதில் "தேடல்" நாடகம் தே.லக்ஸ்மன் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்டபோது. (48)

# தமிழ் எழுத்துக்களைக் கொண்ட தமிழர் நாட்காட்டி வெளியீடு




(யாழ்ப்பாணம்)

தமிழ் எழுத்துக்களைக் கொண்டு அமைக்கப்பட்ட இவ் வருடத்துக்கான நாட்காட்டி வெளி வந்துள்ளது.

திருவள்ளுவர் ஆண்டு 2046 எதிர்வரும் தைத்திருநாளில் பிறக்கின்றது. இதனையே தமிழ்ப் புதுவருடமாகக் கொள்வோரும் உள்ளனர். தமிழ் மாதங்களான சுறவம், கும்பம், மீனம், மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும் தமிழுக்குத் தொண்டாற்றிய பெரியோர்களின் படங்களைத் தாங்கியும் இந்நாட்காட்டி வெளிவந்துள்ளது.

கிளிநொச்சி ஜெயந்திநகரைச் சேர்ந்த நா.வை. மகேந்திரராசா என்ற மின்பொறியியலாளர் தமிழ் மீதுள்ள ஆர்வத்தினால் ஒவ்வோர் ஆண்டும் இந்நாட்காட்டியை வெளியிட்டு வருகின்றார்.

நாட்காட்டியைப் பெறவிரும்புவோர் நா.வை.மகேந்திரராசா, இல.84, ஜெயந்திநகர், கிளிநொச்சி என்ற முகவரியில் தொடர்பு கொள்ளமுடியும். தொலைபேசி இல. 0776203788

தமிழ் மீதான ஆர்வத்தினால் இவர் தனது பெயரைக் குமரி வேந்தன் எனவும் தனது ஊரை வெற்றிநகர் எனவும் பயன்படுத்தி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (48)

# கூட்டுறவுச்சங்க மோசடிகளை விசாரிக்க விசாரணைக்குழுவை அமைக்கவும்

## கூட்டுறவு ஆணையாளர் உத்தரவு

மருதங்கேணி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கடந்த கால மோசடிகளை விசாரிக்க விசாரணைக்குழு அமைக்குமாறு கூட்டுறவு ஆணையாளர் உத்தரவு விட்டுள்ளார்.

மருதங்கேணி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கடந்த காலங்களில் இடம்பெற்றதாக பொதுச் சபையால் குற்றம் சாட்டப்பட்ட இச் சங்கத்தின் தற்போதைய தலைவர் மீதும் ஏனையவர்கள் மீதுமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொதுச் சபையின் தீர்மானத்திற்கு அமைவாக பணிப்புரை விடுத்துள்ளார்.

அதாவது ஏற்கனவே நிதி மோசடிகளிலும் ஊழல்களிலும் ஈடுபட்டவர்கள் தற்போதும் இந்தப் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக பீடத்தை அலங்கரித்து வருவதால் இவர்களால் சுயாதீனமான விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு இக் குழு நீதியான முறையில் விசாரணைகளை மேற்கொண்டு பல இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்ட பணத்தை மீண்டும் சங்கத்திற்கே பெற்றுக் கொடுக்கவும் ஊழல்களில் ஈடுபட்டவர்கள் தற்போதும் நிர்வாகத்தில் தலைமைப் பதவியில் இருப்பதால் இவர்கள் மீதுசட்ட ரீதியான நடவடிக்கைகளை சரியான முறையில் அமைக்கப் படப்போகின்ற விசாரணைக் குழு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என பொதுச் சபை உறுப்பினர்கள் கேள்வி எழுப்புவதுடன் விசாரணைக் குழுவை நியமிப்பதற்கு ஏன் தாமதம் காட்டப்படுகிறது எனவும் தங்களது அதிருப்தியை வெளியிட்டு உள்ளனர்.

இதேவேளை இவ் விசாரணைக் குழவின் அவசியம் தொடர்பிலும் இங்கு இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பிலும் விரிவான விளக்க கடிதம் ஒன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு பொதுச் சபை உறுப்பினர்கள் அனுப்பி வைத்துள்ளனர். அத்துடன் ஏற்கனவே அச் சங்கத்தின் தலைவராக இருந்தவர் இயற்கை மரணம் எய்தியுள்ளதால் இவருடைய இடத்திற்கு புதியவரை நியமிப்பதற்கு உடனடியாக பொதுச் சபையை கூட்டி புதியவரைத் தெரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு பொதுச் சபையினர் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வறிய மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

2015 புதுவருடத்தை முன்னிட்டு 'நாம் நண்பர்கள்' அமைப்பினூடாக போரால் பாதிக்கப்பட்ட மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

நாம் நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் "கல்வியில் வறுமையினை ஒழிப்போம்" எனும் தொனிப்பொருளில் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக மாணவிக்கான துவிச்சக்கரவண்டி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

மேலும் கிடைக்கப்பெற்ற விண்ணப்பத்தின் அடிப்படையிலேயே இம் மாணவிக்கான துவிச்சக்கரவண்டி மற்றும் கற்றல் உபகர ணங்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான அனுசரணையினை புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் சண்முகநாதன் குருபரன் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த மாணவி கல்வி அடைவுமட்டத்தில் காட்டும் முன்னேற்றத்திற்கேற்ப தொடர்ந்தும் கல்விக்கான உதவிகள் வழங்கப்படுமென நாம் நண்பர்கள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (48)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

நாகர் கோவில் பூர்வீக நாக தம்பிரான் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் இன்று சனிக்கிழமை காலை 6 மணி முதல் இடம்பெறவுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆலயத்தில் இடம்பெறவுள்ள இம்முற்றோதலில் அடியார்கள் கலந்துகொண்டு எம்பெருமான் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார்.

# பஞ்சபுராண நூல் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தெய்வத் தமிழ்ச்சுடர் கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரனின் "தெய்வீகத் திருமுறை அமுதம்" பஞ்சபூரண நூல் வெளிவந்துள்ளது.

இந்நூலில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் ஆகியன அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முரசின் இன்றைய பலன்

(03.01.2015 சனிக்கிழமை)

ஜய வருஷம் மார்கழி மாதம் 19 ஆம் திகதி.
திரயோதசி/அமிர்தசித்தம்.
ரோகினி நட்சத்திரம் மு.ப.07.59 வரை. பின் மிருகசீரிடம்.
இராகு காலம 09.30 - 11.00 வரை. சுபநேரம 03.30 - 05.00 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
பசப்பு வார்த்தைகள் கூறி பண மோசடி செய்யும் நிலைக்கு தக்கவைக்கப்படலாம்.

**ரிஷபம்**
நீண்ட நாட்களாக இழுபட்ட நிலுவை முறைப்பாட்டினால் சுமுக நிலைக்கு வருதல்.

**மிதுனம்**
புதிய தொழில் முயற்சி ஆரம்பிக்க மற்றும் பயண முயற்சிகளில கால்பதித்து வெற்றி தரும் யோகமுண்டாகும்.

**கடகம்**
சனீஸ்வரன் 5இல் வந்துள்ளதால் குணமடையும் நிலையில் காணப்பட்ட நோய்கள் மீண்டும் தலைதூக்கலாம்.

**சிம்மம்**
இழுபட்டுக் கொண்டிருக்கும் நிலுவையைப்பெற மத்தியத்தர்சபை மற்றும் பொலிஸ் நிலையம் செல்ல முடிவெடுத்தல்

**கன்னி**
வியாழசுகம் இருப்பதினால் பழைய மனையை மெருகூட்டி அமைப்பதற்கு சுபதினத்தைப் பார்த்தல்.

**துலாம்**
ஏழரைச்சனி கடைக்கூறு ஆரம்பித்து விட்டதினால் பூட்டிய வியாபார நிலையத்தை மீண்டும் திறக்க முயற்சித்தல்.

**விருச்சிகம்**
வெளியூர் பயணம் பற்றிய தித்திப்பான முடிவு வந்தடைதல்.

**தனுசு**
விவாகத்திற்காக வெளியூர் மணமக்கள் தாயகம் வருதல்.


**மகரம்**
அரசுத்தொழில் கிடைக்க சம்பந்தப்பட்டவர்களை நாடுதல்.

**கும்பம்**
மாமன்மாரின் உறவில் ஏதோ ஒரு பிரச்சினையை முன்னிட்டு வாக்குவாதப்படல்.

**மீனம்**
காலத்துக்கு தகுந்தமாதிரி வியாபார உத்திகளை மேற்கொண்டால் இலாபம் தக்க வைக்கும்.

# யாழில் ஜனாதிபதியின் தேர்தல் பிரசாரத்தின்போது...









படப்பிடிப்பு : ஆர். ராஜகுமார்











# காங்கேசன்துறை வரையான ரயில் சேவை...





# பொது எதிரணியின் கூட்டணிக்குள் தமிழ் மக்களின் நலன்கள் இல்லை

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கிளிநொச்சி)

மைத்திரிபால சிறிசேன தலைமையில் உருவாக்கப்பட்ட பொது எதிரணியின் கூட்டமைப்பு மேற்குலக நாடுகளின் நலன்களை பாதுகாப்பதற்கே தவிர நாட்டின் நலன்களுக்காக அல்ல. அந்தக் கூட்டணிக்குள் தமிழ் மக்களின் நலன்களும் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதி தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



கடந்த 31ஆம் திகதி கிளிநொச்சி கோணாவில் பிரதேசத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

நாட்டின் முழு இனவாதிகளின் கூட்டாகவே இந்த பொது எதிரணியின் கூட்டணி காணப்படுகிறது. இந்த கூட்டணிக்குள் சேர்ந்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் வாக்குகளை பெருமளவு பணத்திற்கு விற்றுள்ளனர். தாங்கள் எதைச் சொன்னாலும் ஏன் என்ற கேள்விக்கே, இடமின்றி தமிழ் மக்கள் எதையும் செய்வார்கள் என்ற எண்ணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடந்து கொள்கிறது.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் கடந்த கால தீர்மானங்கள் எல்லாம் தோற்றுப் போனதாகவே இருந்துள்ளது.

எனவே தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எல்லா தீர்மானங்களையும் தமிழ் ஏற்றுக்கொண்டு செயற்படுவது என்பது மக்கள் தங்களின் தலை மேல் தாங்களே மண் அள்ளிப் போட்டுக்கொள்வதற்கு ஒப்பானது எனவே தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் மிகவும் ஆழமாக சிந்தித்து செயற்பட வேண்டிய கட்டாயத்திற்குள் இருக்கின்றனர்.

கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் இராமச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவர் மனோகரன் உறுப்பினர் சபாநாயகம், கிளிநொச்சி வர்த்தகச் சங்கத்தலைவர் இரத்தின மணி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் பெருமளவு பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.


## இரு நாட்கள் இசைவேள்வி

சித்தன்கேணியில் இசைக் கச்சேரி நிகழ்த்த இந்தியாவில் இருந்து இசை விற்பன்னர்கள் வருகை தரவுள்ளனர்.

நாளையும், நாளை மறுதினமும தென்னிந்திய இசை விற்பன்னர்களின் இசை வேள்வி சித்தன்கேணி சிவன் தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது.

மேலும் சித்தன்கேணி சிவ சிதம்பரேஷ்வர ஆலயத்தில் மாரகழி மாத திருவெம்பா காலத்து தேர்த்திரு விழா நாளை இடம் பெறவுள்ளது. அன்றைய தினம் மு.ப. 10.30 மணிக்கு ஆலய கோபுரமுன் மண்டபத்தில் முதலாவது இசைக கச்சேரியும் மறுநாள் மாலை 3.00 மணியிலிருந்து 6.00 மணி வரையும் இரு நாட்கள் திருவாசக இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வை சிறப்பிக்க இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து மதுரை மீனாட்சி அம்மன் ஆலய பிரதான ஓதுவார்மூர்த்தி தேவார இசைக் 'கலைமணி பொன். மு. முத்துக்குமரன், சிங்கப்பூர் ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலய பிரதான ஓத்வார்மூர்த்தி தேவார இசை மணி சண்முக திருவரங்க யயாதி, திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலய ஆஸ்தான மிருதங்க வித்துவான், கலைச் சுடர்மணி ரி.எம். சிவகுமாரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (92)



## பரமர் சங்கமம்

'புத்தகம் கொடுப்போம் புதுயுகம் படைபோம் இவ்விருது வாக்கியத்தை சமீபத்தில் யாழ்ப்பாணத்து சக்தி எப்.எம். ஊடாக விளம்பர வாகனத்தில் பாத்தன் .அலுமாரியில புத்தகங்கள் அடுக்கப்பட்டுள்ள படமும் வரையப்பட்டிருந்தது.

புத்தகம் கொடுப்பது சரி அதென்ன புதுயுகம் படைப்போமென்பது? தமிழர் சமுதாயத்தில் புத்தக வாசிப்பு ஏட்டுச் சுவடிகளில் இருந்தே வந்துள்ளது. வாசிப்பைப் புதிசாத் தொடங்கிறேண்டா புதுயுகத்தோற்றம் தானை. என்னமா? இருந்த எங்கடவாசிப்பு இண்டைக்கு இப்புடிக் கீழ்ப்போயிருப்பது எதனால்?

வானொலி தோன்றி வளர்ந்த போதெல்லாம் வாசிப்பு இப்புடிப் பின்போய்விடவில்லை. தொலைக்காட்சியைத் தொடர்ந்து மின்னஞ்சல், பேஸ்புக் என அடுத்தடுத்துத் தோன்றியதும் வாசிப்பில் படிப்படியாக வீழ்ச்சி ஏற்பட்டு இண்டைக்கு சுத்த மோசமாக தமிழரிடையே அருகிப் போச்சு வாசிப்பு.

இதனால் எங்கடை கலை, இலக்கியப் படைப்புகளே நலிஞ்சு போச்சு. ஒரு நாட்டின் இனத்தின் தொன்ம விழுமியங்களைக் கட்டிக்காப்பதுக்கும் ஏனைய நாட்டுடன் நிமிர்ந்து நிற்கவும் எம்மால் உருவாக்கப்படும் கலை, இலக்கியங்களாலேயே முடியும். வாசிப்பு அற்ற சமுதாயத்தில எப்புடிப் புதுப்புது கலை இலக்கியங்கள் தோன்றும்?

அத்துறையில் ஈடுபடுகின்ற படைப்பாளிகளின் நூல்கள் விற்பனையாகாவிட்டால் எப்படி வெளிவரும்? 60 களில் ஆயிரம் பிரதிகள் அச்சிட்டு வெளியிடப்பட்ட நிலைமை இன்றில்லை. முந்நூறு நூல்களே அடிக்கப்படுகின்றன. சமீபத்தில் நான் வெளியிட்ட இரு நூல்களில் ஐம்பது ஐம்பது பிரதிகளை கொழும்புக்கு எடுத்துச் சென்று திருப்பிக் கொண்டு வரவேண்டியதாப் போச்சு.

பூபாலசிங்கம் ஸ்ரீதர் சிங்மட்டும் பத்துப் பத்துப் பிரதிகளை வாங்கிக் காசுதந்தார். வெள்ளவத்தேல தம்பியார் ராஜன் இவ்விரு பிரதிகளை வாங்கிக் காசு கொடுத்தார். பிரதிகளைத் தந்திட்டுப் போறேன் காசைப் பிறகுகொடுக்கலாமெண்டதும் ஐயோ மன்னிச்சுக் கொள்ளும் இஞ்சை இப்ப தமிழ்ப் புத்தகங்களே விக்காமல் கிடக்கொண்டு சொல்லுதுகள்.

கட்டிக் காவின பாரத்தைக் கொண்டு வரவேண்டியதாகப் போச்சு இந்நிலேல எப்புடி எதிர்காலத்திலை நூல்களை எழுதி அச்சிட்டு வெளியிட்டுப் பிழைக்க முடியும்? புத்த கங்கள் வெளியிட முடியாத எழுத்தாளர்களுக்கு உதவிவந்த வெளியீட்டாளர்களும் மூட்டையைக் கட்டிப் போட்டினம்.

தமிழரிடையே வாசிப்பைத் திரும்பக்கொண்டு வாறேண்டாப் புதுயுகம் படைக்கத் தான் வேணும். அதனில் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பிச்சிருக்கும் வெகுஜன ஊடகமான சக்தி எப்.எம்.டிவி நிறுவனத்தாரின் முயற்சி முன்மாதிரியாக இருக்கும்.

அவர்கள் வெற்றி அடைவர் அடைய வேணும் அவ் வெற்றியே தமிழரின் வாசிப்பிலும் கலை இலக்கியவாதிகளின் வாழ்க்கைக்கும் புதுயுகத்தை ஆரம்பித்து வைக்கும் இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்...

# வலி. மேற்கு பிரதேச சபையின் வசந்தம் நூல் வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வலி. மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி வார இறுதி பெருவிழாவை முன்னிட்டு வலி. மேற்கு வசந்தம் நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.

முதற் பிரதியை பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்திய துணைத் தூதுவர் எஸ்.டி.மூர்த்தி பெற்றுக் கொண்டார்.

சிறப்புப் பிரதியை யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் வண. கலாநிதி டி.எஸ். சொலமன், வேள்ட் விசன் செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜே. அன்ரனி, சிவஸ்ரீ சபா. வாசுதேவ குருக்கள், வண. பிதா செபஸரியன் அன்ரனி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

வலி. மேற்கின் வசந் தத்தின் நூல் வெளியீட்டுரையை ஆசு கவி. சிவ. சுப்பிரமணியம் வழங்கினார்.

இதில் த. நடனேந்திரன் எழுதிய இளையோரை சீரழிவு பாதைக்குள் இட்டுச் செல்லும் போதைப் பழக்கம், செ. ரமேஷ் எழுதிய - வடக்கின் தனித்துவமான சபை வலி. மேற்கு பிரதேச சபை, டாக்டர் திருமதி நிர்மலாதேவி சண்முகநாதன் எழுதிய - உணவே மருந்து, த. சசீதரன் எழுதிய சுற்றுப்புறச் சூழல், க. ஐயலிங்கம் எழுதிய என்றும் இளமையுடன் வாழ்வது எப்படி?, ச. இராசதுரை எழுதிய வலி. மேற்கின் பொருளாதார வளமும் வாழ்வும், ச. சபேசன் எழுதிய - பிரதேச சபையின் மகத்தான பணி மக்களுக்கு காணி பகிர்ந்து வழங்கும் திட்டம், க. சபாநாயகம் எழுதிய ஒழுங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித் திட்டம், திருமதி நா. ஐங்கரன் எழுதிய வலி. மேற்கின் அபி விருத்தி திட்டங்களில் மீள் பார்வை உள்ளிட்ட சிறப்புக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளன.

மேலும் இந் நூலுக்கு தவிசாளர் திருமதி ஐங்கரன், மற்றும் மதகுருமார்களான சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள், வண. பிதா செபஸ்ரியன் அன்ரனி ஆகியோர் ஆசியுரை வாழ்த்துரைகளை வழங்கியுள்ளனர். (92)

## குடிநீர் விநியோகத் திட்டம் முன்பள்ளி நிர்வாகத்திடம் கையளிப்பு

(வடமராட்சி)

முல்லைத்தீவு மாவட்டம் உடையார்கட்டு பிரதேச மூங்கிலாறு கலைவாணி முன்பள்ளிக்கு ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் எஸ்.வி. சரத் சந்திராவின் நிதி உதவியினால் கிளிநொச்சி கருணா நிலையத்தின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டம் அண்மையில் சரத் சந்திராவினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டு முன்பள்ளி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. இதனையடுத்து கலைவாணி முன்பள்ளிச் சமூகம் கிராம உத்தியோகத்தர் எஸ். பாலகிருஸ்ணன் தலைமையில் குடிநீர் விநியோகத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்கிய சரத் சந்திராவைப் பாராட்டி விழாவை நடாத்தியது.

இவ்விழாவிலேயே உடையார்கட்டு பிரதேச செயலர் எஸ். பிரதாபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். கிளிநொச்சி கருணா நிலையத் திட்ட இணைப்பாளர் எஸ். கோகுலதாஸன், அபிவிருத்தித் திட்ட உத்தியோகத்தர் எஸ். சஞ்சீவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

கருணா நிலையத்தினரால் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தையல் பயிற்சி, கைவினைப பயிற்சி, மனைப் பொருளியல் பயிற்சிகளில் பயிற்சி பெற்ற பெண் பயனாளிகளின் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சியும் இடம் பெற்றது. இக்கண்காட்சியைப் பார்வையிட்ட பிரதேச செயலர் பிரதாபன் இப்பயனாளிகளின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதாக உறுதியளித்தார். (01)



தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியின் ஜனன தினத்தையொட்டி பருத்தித்துறை [illegible] கிருஸ்ணா சாரதா சேவாச்சிரமத்தில் வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உப[illegible] வழங்கப்பட்டன. இதில் பேராசிரியர் எம். நடராஜசுந்தரம், தொழிலதிபர் என். குகன் ஆகியோர் உபகரணங்களைக் கையளிப்பதைக் காணலாம். (01)





# இர்ணைமடுக் குளமும் சிறிதரனின் சின்னப்பிள்ளைத்தனமும்

தாண்டவன் கட்டுரையிலிருந்து.

ஒரு சிறு பிள்ளை வீட்டில் உள்ள ஒரு அத்தியாவசியமான பொருளை கையில் எடுத்து விளையாடத் தொடங்கினால் அப் பொருளை அதனிடம் இருந்து வாங்குவதற்குப் பெரும்பாடு படவேண்டி வரும் என்பது குழந்தைகள் பெற்ற அனைத்து அப்பா, அம்மாவுக்கும் தெரிந்த விசயம். அந்தக் குழந்தையிடம் அப் பொருளை பாதுகாப்பாகவும் அக் குழந்தையை அழ வைக்காமலும் அப் பொருளை வாங்க வேண்டும் எனின் சில மூளையுள்ள பெற்றோர்கள் அக் குழந்தையிடம் பெறுமதி இல்லாத கவர்ச்சிகரமான பொருளைக் காட்டும் போது அக் குழந்தை பெறுமதிவாய்ந்த பொருளை விட்டு விட்டு கவர்ச்சிகரமான பொருளை வாங்கிவிடும். இதுதான் புத்திசாலித்தனமான குழந்தை வளர்ப்பாகும்.

எந்தவித அடையாளமும் இன்றித் திரிந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் சேர்ந்து பாராளுமன்ற உறுப்பினராகிய சிவஞானம் சிறிதரனும் தற்போது சின்னப்பிள்ளைத் தனமான முறையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

தமிழ்த்தேசியத்தை வைத்து படாதபாடுபட்டுக் கொண்டு அனைவரையும் ரணகளமாக்கிக் கொண்டிருந்த சிறிதரனிடம் இருந்து எப்படி பாதுகாப்பான முறையில் அந்த தேசியத்தை வாங்குவது என்று யோசித்துக் கொண்டிருந்தவர்களுக்கு தோன்றிய விடயமே இரணைமடுக்குளமாகும்.

இந்தக் குளப் பிரச்சினை வந்தவுடன் சிறிதரனுக்கு தமிழ்த்தேசியம் பெரும்பாலும் மறந்து போய்விட்டது. இனி மேல் தமிழ்த்தேசியத்தை வைத்து தனது பாராளுமன்றக் கதிரையைக் காப்பாற்றுவது கடினம் என்ற நிலையில் சிறிதரன் தற்போது விளையாட எடுத்த விடயமே இரணைமடுக்குளமாகும்.

யாழ்ப்பாணத்திற்கு இரணைமடுவில் இருந்து தண்ணீர் வருவதைத் தடுத்ததில் பெரும் பங்குவகித்த சிறிதரன் தற்போது இன்னும் சின்னப்பிள்ளைத் தனமான காரியங்களில் இறங்கியுள்ளது பெரும் பிரச்சினையாக உள்ளது.

பொதுவாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ளவர்கள் வழித்தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு எடுத்து அடித்து அதனை புகைப்படங்களாக எடுத்து ஊடகங்களில் போட்டு விளம்பரம் சேர்ப்பவர்கள்.

வெளிநாட்டு உறவுகள் போரில் பாதிக்கப்பட்ட்வர்களின் நலனுக்காக அனுப்பும் பணத்தை ஆட்டையைப் போட்டு அதில் அரைவாசிக்கும் கூடுதலாகச் சுரண்டிவிட்டு பின்னால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொஞ்ச உதவியைச் செய்துவிட்டு அதையும் புகைப்படங்களாகப் போட்டு பெருமை சேர்ப்பவர்களாவர்.

இதே போல் சிறிதரன் கிளிநொச்சி மக்களின் நலனைக்கருத்தில் எடுக்காது சில நாட்களுக்கு முன்னர் ஒரு நாசகாரமான வேலை ஒன்றைச் செய்துள்ளார்.

அதாவது இரணைமடுக் குளம் தனது கொள்ளளவுக்கு மேலதிகமான நீரைப் பெற்றுவிட்டது. இதனால் இரணைமடுக் குளத்தின் பகுதிகளில் இருந்த அணைக்கட்டுக்களில் சில பகுதிகளில் கசிவுகள் ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

இதனால் இரணைமடுக் குளத்தின் வான்கதவுகளை உடனடியாகத் திறப்பதற்காக குளத்தைப் பராமரிக்கும் அதிகாரிகள் முயன்ற போது சிறிதரன் அப் பகுதிக்குச் சென்று அச் செயலைத் தடுத்து நிறுத்தி மறுநாள் திறக்குமாறு தெரிவித்துள்ளார்.

நீர்க்கசிவைப் பற்றி அதிகாரிகள் தெரிவித்த போதும் அதனை ஏற்காத சிறிதரன் மறுநாள் திறக்கும்படி தெரிவித்தது ஏன் என அதிகாரிகள் சிந்தனையில் ஆழ்ந்துள்ளனர். அதன் பின்னரே விடயம் வெளிச்சத்திற்கு வந்தது.

முதல்நாள் சிறிதரன் சென்று பார்வையிட்ட புகைப்படத்தையும், மறுநாள் திறப்பதற்காக ஆயத்தப்படுத்திய புகைப்படங்களையும் ஊடகங்களில் வெளியிடுவதற்காகவே சிறிதரன் இவ்வாறு சின்னப்பிள்ளைத் தனமாகச் செயற்பட்டதாக தெரியவருகின்றது.

பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிருடன் விளையாடும் அளவுக்கு சிறிதரனின் ஊடக விளம்பர மனநோய் அதிகரித்துள்ளது மிகவும் வருந்தத்தக்கது.

அதுமட்டுமல்ல இரணைமடுக்குள அணைக்கட்டு உயர்த்திக் கட்டப்படுவதைத் தடுத்து, யழ்ப்பாண மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு நல்ல குடிநீர் கிடைப்பதற்கு முட்டுக்கட்டை போட்ட சிறிதரன் குழுவினர் குளத்து ணீரைக் கடலுக்குத் திறந்து விடுவதை போட்டோ பிடித்து மகிழும் விவஸ்தை கெட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

இரணை மடுக்குளம் வெள்ளையரால் கட்டப்பட்டது. மழை இயற்கை கொடுத்த வரப்பிரசாதம். இவற்றை பாதுகாத்து இரணைமடுக் குளத்து மக்களுக்கு சரியான முறையில் நன்மைகளை வழங்குவதற்காக, இலங்கை அரசு பல்லாயிரக்கணக்கான சம்பளம் கொடுத்து அதிகாரிகளை அங்கு வைத்துள்ளது.

இவ்வாறு இருக்க சிறிதரன் அங்கு சென்று சின்னப்பிள்ளைத் தனமாக நடப்பதை நினைத்து சிறிதரனுக்கு வாக்குப் போட்டவர்கள் வெட்கப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் வன்னிப்பகுதியில் இருந்த காலத்தில் இரணைமடுக் குளம் தொடர்பாக அதிகாரிகளின் கருத்தின்படியே செயற்பட்டார்கள். ஆனால் சிறிதரன்

குடிநீர்ப் போத்தலை வைத்து குழந்தை ஒன்று விளையாடிக் கொண்டு இருக்கின்றது. அக் குழந்தை அக் குடிநீர்ப் போத்தலுக்குள் "சூச்சா" இருந்து அதனை மற்றவர்கள் பாவிக்காதபடி செய்வதற்கு இடையில் சிறிதரனுக்கு வேறு ஏதாவது ஒரு விடயத்தை காட்டுங்கள்.

# "உங்களைப் படைத்த கடவுளை நான் எதிர்க்கவில்லை; நீங்கள் படைத்த கடவுளைத்தான் நான் மறுக்கிறேன்"

கடவுள் எனும் கருத்தாக்கம் குறித்த விமர்சனங்களோடு தமிழில் சில திரைப் படங்கள் வந்திருக்கவே செய்கின்றன. உடனடியாக இருவர் நினைவுக்கு வருகிறார்கள். முதலாமவர் வேலுபிரபாகரன். மற்றவர் கமலஹாசன்.


வேலுபிரபாகரன் ஆக்கங்கள் எவ்வித கலை உணர்வும் இல்லாதவர்கள் அல்லது எதுகுறித்தும் சிந்திக்காமல், உரத்து எதிர்ப்பதாலேயே அது புரட்சியாகிவிடும் என நம்புபவர்களுக்குத் தோதான திரைப்படங்களாக இருக்கும். அவை வெறும் கடவுள் எதிர்ப்புப் பிரசாரத்தை மட்டும் நம்புபவை.


கமல் படங்கள் அப்படியல்ல. மேலோட்டமாகப் பார்க்கும் போது கலை போல தோன்றும். ஆனால், அவை இஸ்லாமிய வெறுப்பை உமிழ்பவை. கடவுள் எனும் பிம்பத்தை எதிர்த்துக்கொண்டே மதச்சார்போடு அரசியல் பேசுபவை.

பொதுவாகவே நம்மிடம் இதுபோன்றவர்களின் குரல்களை வகுத்துப் பார்க்கும் பழக்கம் இருப்பதில்லை. மிக மேலோட்டமாக ஒரு கலைப்படைப்பை அணுகி ஒரு வகைமைக்குள் கொண்டுவர மினக்கெடுகிறோம். புரட்சியாளர்களைக் காண்பதில் அத்தனை ஆர்வம் நமக்கு.

சிந்தனையாளன் முரண்பட்டுக்கொண்டே இருக்கிறான். எல்லா கருத்தாக்கத்தையும் கேள்வி எழுப்பிக்கொள்கிறான். ஒருவகையில் அவன் அணுகுமுறை மூர்க்கமாகவே தொடங்குகிறது. ஆனால், அதில் தெளிவடையும் போது நிதானம் கைகூடி விடுகிறது.

தேர்ந்த கலைஞர்கள் கூடியிருக்கும் திசைகளில் நான் சிரிப்பொலியைத்தான் கேட்கிறேன். ஒன்றை முழுமையாக அறியும் போது அங்கு இறுக்கம் இருப்பதில்லை. மனம் தளர்கிறது. அங்கு அதற்குமேல் இரகசியங்கள் இல்லை. இரகசியம் இல்லாத இடத்தில் எதுவும் நிதானத்துடன் நிகழ்கிறது. சாதாரணமாகவே நம்மூர் பெரிசுகளிடம் இந்த நிதானத்தைப் பார்க்கலாம். வாழ்வை முழுமையாக அறிந்த ஒருவரிடம் எந்தச் சிக்கலைச் சொன்னாலும் எளிமையாக்கிச் செல்வதைக் காணலாம்.






அமீர்கான் நடித்து வெளிவந்துள்ள "பிகே" திரைப்படத்தைப் பார்த்தபோது எனக்கு அவ்வாறுதான் தோன்றியது. சர்ச்சையான ஒரு கருவை அனைவரும் இரசிக்கும்படி திரைக்கதையாக்கியுள்ளனர்.

வேற்றுகிரகத்திலிருந்து வந்து, தனது கிரகம் திரும்ப பயன்படும் தொலைவியக்கியை ஒருவனிடம் பறி கொடுத்து அதை தேடி அலைகிறார் அமீர்கான். அனைவரும் அவரிடம் கடவுள்தான் உங்களுக்கு உதவுவார் எனக்கூற கடவுள்களைத் தேடி அலைகிறார். மதங்களும் சடங்குகளும் அவரைக் குழப்புகின்றன.

ஒரு மதம் மாட்டை கடவுள் என்கிறது. ஒரு மதம் அதை உணவு என்கிறது. ஒரு மதம் கடவுளுக்கு "வைனை" படைக்கிறது. ஒரு மதம் மதுவை வெறுக்கிறது. ஒரு மதத்தில் காலணி அணிந்து வணங்க அனுமதி உண்டு. ஒரு மதத்தில் இல்லை. வெள்ளையாடை விதவைக் கான உடையென ஒரு மதம் சொல்கிறது. வெள்ளை யாடையே ஒரு மதத்தின் திருமண உடையாக இருக்கிறது.

மதமும் சடங்குகளும் வேற்றுக்கிரகவாசியான அமீரை பந்தாட அவர் கடவுள் காணாமல் போய் விட்டதாகப் போஸ்டர் அடித்து தேடுகிறார். மதங்களுக்குள்ளான இந்த முரண்நகையும் அதை அறியாது பின் செல்லும் ஒரு

அதில் அவர்களுக்கு சந்தேகமோ குழப்பமோ துளியும் இல்லை. கட்டுரையாக எழுதி வாசித்தால் மதவாதிகள் பொங்கியெழும் ஒரு கருவை வயிறு குலுங்க சிரிக்கும் படி திரைக்கதை அமைத்தவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

- ம. நவீன் -

# "ராஜினாமாவா... அதெல்லாம் நம்மகிட்டே வேண்டாம்..."



பழம் பெரும் நடிகர், டி.வி.என். என்று அழைக்கப்படும் டி.வி.நாராயணசாமி, நாடக நடிகர் மற்றும் தி.மு.க..வின் ஆரம்ப காலப் பேச்சாளர்; கட்சி நாடகங்களையும் நடத்தி வந்தவர். நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரனின் உடன் பிறந்த தங்கையை திருமணம் செய்தவர். இவர் எழுதிய, "நடிகமணி டி.வி. நாராயணசாமி" என்ற நூலில் குறிப்பிட்டிருக்கும் ஒரு சுவார சிய சம்பவம்.

"1964ஆம் ஆண்டு, ஒரு நாள், மாலையில் படப்பிடிப்புக்குச் சென்ற எஸ்.எஸ்.ராஜேந்திரன், இரவு வெகு நேரம் ஆகியும் வீடு திரும்பவில்லை. இந்நிலையில், கார் சத்தம் கேட்டு வெளியே வந்த போது, கருணாநிதியும், அவரது மருமகன் மாறனும் வந்து கொண்டு இருந்தனர். அவர்களை வரவேற்று, "என்னங்க இந்த நேரத்தில..." என்றேன்.

உடனே, "ஓ"வென கதறி அழ ஆரம்பித்தார் கருணாநிதி. பதறிப் போன நான், அவரை அமைதிப்படுத்தி, "விஷயத்தைச் சொல்லுங்க..." என்றேன்.

அவர் மீண்டும் விம்மலுடன், "அண்ணாதுரை என்னைத் திட்டி விட்டார்..." என்று கூறி, அழத் துவங்கினார். உடனே நான், "நம்ம அண்ணாதுரை தானே திட்டினார் அதற்கென்ன, பொறுமையா இருங்க..." என்று சமாதானப்படுத்தி, "அண்ணாதுரை எதுக்காக திட்டினார்?" என்று கேட்டேன்.

"கட்சிக்கு உன்னால் நன்மை இருப்பது போல், தீமையும் இருக்கிறது..." என்று திட்டி விட்டார். அதனால, பொருளாளர் பதவியை ராஜினாமா செய்யப் போறேன்..." என்றார்.

"பொறுமையாக இருங்க அண்ணாதுரை நம்மைக் கண்டிக்காமல் வேறு யாரைக் கண்டிப்பார்... எல்லாம் சரியாகிடும். ராஜினாமா என்றெல்லாம் பேசாதீர்கள்..." என்று சாந்தப்படுத்தினேன்.

அதுவரை பேசாதிருந்த மாறன், "இல்லண்ணே... இனி மேல் சரிப்பட்டு வராது..." என்றார்.

உடனே நான், "தம்பி... நீங்க சின்னப் பையன் பேசாம விடுங்க..." என, சற்று அழுத்தமாக கூறவும், மௌனமானார் மாறன்.

உணர்ச்சி வசப்படக் கூடியவர் கருணாநிதி. அவர் உணர்ச்சி வேகத்தில் சொன்னதை நான் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

சிறிது நேரத்தில், படப்பிடிப்புக்குச் சென்றிருந்த எஸ்.எஸ்.ஆர்., வந்து விட்டார். அப்போது நள்ளிரவு, 1:00 மணி. கருணாநிதியைப் பார்த்து, "என்ன... . இந்நேரத்தில..." எனக் கேட்ட எஸ்.எஸ்.ஆரிடம், விவரத்தைக் கூறினேன். அவர் கருணாநிதியை நோக்கி, "ராஜினாமாவா... அதெல்லாம் நம்மகிட்டே வேண்டாம்..." என்று வேடிக்கையாகப் பேசி, கலகலப்பை ஏற்படுத்தினார். ஆனால், மாறனோ, "இல்லண்ணே... நாங்க கதை, வசனம் எழுதிப் பிழைச்சுக்குவோம் எங்கள விட்டுடுங்க..." என்றார்.

"தம்பி... நீங்க சின்னப் பையன் சொல்றதக் கேளுங்க. எல்லாம் நாளைக்குப் பேசிக்குவோம்..." என்று அவர்களை வழியனுப்பி வைத்தேன்.

மறுநாள் அண்ணாதுரையைச் சந்தித்து, கருணாநிதி வருந்தியதைச் சொன்னேன்.

உடனே அவர் மனம் தணிந்து, அன்று மாலை, "தம்பிக்கு கடிதம்" பகுதியில், கருணாநிதியைப் பாராட்டி எழுதினார். அன்றோடு பிரச்சினை தீர்ந்தது.

---

குழந்தையைப் போன்ற அமீர்கானுக்கு நடக்கும் சம்பவங்களும் முதல் பகுதி என்றால் அதன் குழப்பங்களை பகிரங்கமாக வாதிடுவது இரண்டாம் பகுதி.

கடவுளின் தூதுவர்களாக உலாவும் கோப்ரேட் சாமியார்களைக் கடுமையாக விமர்சித்து உருவாகியுள்ளது இரண்டாம் பகுதி. "உங்களைப் படைத்த கடவுளை நான் மறுக்கவில்லை; நீங்கள் படைத்த கடவுளைத்தான் நான் மறுக்கிறேன்" என பேசும் அமீர்கானின் வசனத்தில் அரங்கம் கைதட்டுகிறது.

"நாமெல்லாம் கடவுளின் குழந்தைகள் என்றால் கடவுள் ஏன் இத்தனை சிக்கலான பரிகாரங்களைக் கேட்க வேண்டும். உன் அம்மா உன்னை தரையில் உருளச் சொல்வாரா?" என சாட்டையடியாக விழும் வசனங்கள் தொடர்ந்து அதிர்ச்சியலையை திரையரங்கில் ஏற்படுத்துகிறது.

ஆனால் இந்த அத்தனை கேள்வியையும் அமீர்கான் ஒரு குழந்தையாக இருந்து கேட்கிறார். அவர் விவாதிக்கவில்லை. பூமிக்கு புதிதாக வந்த அவருக்கு எழுந்துள்ள குழப்பங்களை பச்சையாக கொப்பளித்து நமது முகத்தில் உமிழ்கிறார். என் சந்தேகத்துக்கு பதில் சொல்லுங்கள் என உலுக்கியெடுக்கிறார்.

"நீ செய்த பாவங்களால்தான் ஏசு கிறிஸ்து இறந்தார்" எனச்சொல்லும் மதவாதியிடம் "நான் இப்பதானே பூமிக்கே வந்தேன்" என அப்பாவியாக கேட்கும் இடமெல்லாம் குற்ற உணர்ச்சியைத் திணித்து மதத்தை வளர்க்கும் எந்த அமைப்பும் கோபம் கொள்ளவே முடியாமல் போகிறது.

ஒரு கல்லில் வெற்றிலை எச்சிலைத் தடவிய கொஞ்ச நேரத்தில் அது எவ்வாறு பக்தியின் மையமாக ஆகிறதென்றும், அதைச் சூழ்ந்து எவ்வாறு வணிகம் வளர்கிறதென்றும் அமீர்கான் செய்து காட்டும் இடம் ஒரு சிறுகதைபோல வடிவமைக்கப்பட்டுள்ளது.

கலை வெளிப்பாடு சுதந்திரமானது. பிகே திரைப்படத்துக்கு கடுமையான எதிர்ப்புகள் இந்துத்துவ அமைப்புகளிடையே வந்துகொண்டே இருக்கின்றன. ஆனாலும் படத்துக்கு அரங்கம் நிறைந்துள்ளது.

ஒரு மனிதன் கடவுள் எனும் கருத்துருவாக்கத்தை நம்புவதையோ அந்த நம்பிக்கையின் மூலம் கிடைக்கும் சுய திருப்தியையோ படம் எங்குமே சாடவில்லை. அதையெல்லாம் வேலுபிரபாகரனும் சத்யராஜும் புரட்சி என்ற பெயரில் நக்கலடித்துக்கொண்டிருப்பார்கள். மன ரீதியாக அவரவருக்கு உத்வேகம் தரும் பட்சத்தில் உண்மையில் யாரின் பக்தியையும் யாரும் தடுக்க வேண்டிய அவசியமும் இல்லை. ஆனால், பிகே இறுக்கிப் பிடிக்கும் குரல்வளை மதத்தினுடையது.

மதம் என்ற நிறுவனத்தின் கீழ் நடக்கும் வணிகம் பற்றியது. வணிகத்தில் இருக்கும் பொய்மை பற்றியது. பொய்மைகளை மையமாக வைத்து நிகழும் வன்முறைகள் பற்றியது. வன்முறைகளைத் தூண்டும் அதிகாரம் பற்றியது.

அதிகாரத்தை கேள்வி எழுப்பும் எழுதுவுமே எனக்கு உவப்புதான்.

---



# மைத்திரியை ஆதரிக்கும் முகாந்திரம் என்ன?

## வெள்ளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

ஜனாதிபதித் தேர்தலிலை கூட்டமைப்பார் ஆரை ஆதரிக்கிறது எண்டு கட்சி உறுப்பினர்களின்ரை அபிப்பிராயத்தைக் கேக்கப் போகினை எண்டு செய்தி வந்த நேரம் "அப்பிடியொண்டுமில்லை, டீலே அதைத் தீர்மானிக்கும்" எண்டு இந்தப் பத்தியிலை நான் எழுதினனான் பாருங்கோ!

அது நடந்தே விட்டது. கொழும்பிலை வீடும், கொழுத்த காசும் வாங்கியாச்சுது. மைத்திரியை ஆதரிச்சாச்சுது. இது காலங்காலமாய் நடக்கிற சங்கதிதான்.

யாழ்ப்பாணியள் எண்டு சொல்லப்படுகிற வடபுலத் தமிழர்களுக்குப் பனங்கொட்டையள் எண்டு ஒரு பேர் இருக்குது. "படிச்சவை. பல விசியங்களும் தெரிஞ்சவை. தோட்டக்காட்டானையும், மோட்டுச் சிங்களவனையும் பேய்க்காட்டி வேலை வாங்கினவை. போன போன இடங்களிலை எல்லாம் காணியும், சொத்துக்களும் வாங்கிக் குவிச்சவை எண்டு பல வீரப்பிரதாப அடையாளங்கள் இருக்குது.

ஆனால் அரசியல் எண்டு வந்தால் "விரல் சூப்பிற அளவுக்கு குழந்தைப் பிள்ளையள்" எண்டு வெளியூர் நண்பன் ஒருத்தர் சொன்னார்

அவர் சொன்னதிலையும் உண்மை இருக்கத்தான் செய்யுது. ஒரு சின்ன எல்லைப் பிரச்சினைக்கு கோடேறி, அப்புக்காத்துக்கு குடுக்கிறதுக்காகவே காணி பூமியை வித்து, வருசக் கணக்கில் வாதாடி கந்தறுந்து போனதுகளின்ரை வாரிசுகள் இண்டைக்கும் பலபேர் இருக்கினை. அப்புக்காத்துமார் என்ன சொன்னாலும் அதை வேதமெண்டு கேக்கிற கூட்டமது.

அதாலைதான் அப்புக்காத்துக் கூட்டம் தமிழரசுக் கட்சியெண்டு என்ன பித்தலாட்டம் ஆடினாலும் அதை அப்பிடியே விரல் சூப்பினபடி ஆமோதிக்குது அந்தக் கூட்டம்.

இப்ப எந்த முகாந்திரமும் இல்லாமல் மைத்திரியை ஆதரிக்கப் போறமெண்டு கூட்டமைப்பு அறிவிச்சிருக்குது. விரல் சூப்பிற பனங்கொட்டையள் சிலபேர் அதை வேதமெண்டு எடுத்து, அதுக்குப் பின்னாலை இருக்கிற சூக்குமத்தை அறியாமலே மைத்திரியை ஆதரிக்கப் போகினை.


யாராவது ஒண்டிரண்டு சனமாவது வெளிக்கிட்டு வீதிக்கு வந்து மைத்திரியை ஆதரிக்கிறதுக்கு நாலு காரணத்தைச் சொல்லுங்கோ எண்டு கேட்டால் இவையாலை சொல்லேலாது. சம்பந்தன் பத்திரிகையாளரை வச்சுக் கொண்டு இதை அறிவிக்கேக்கை அவை பலதையும் கேக்கினை. அதுக்கு அவர் தன்ரை வழக்கமான பதிலைத்தான் சொல்லுறார். சூடு கண்ட பூனையல்லே!

சரத் பொன்சேகாவை ஆதரிச்சு மண் கவ்வின அனுபவம் இருக்கல்லே. அதாலை அவர் சொல்லுறார் "இண்டைய நாளிலை இந்த முடிவை எடுக்கிறம். அது நாளைக்கு சிலவேளை தவறாயும் இருக்கலாம். அப்ப அண்டைய நிலைமைக்கு ஏற்ப முடிவு எடுப்பம்" எண்டு.

அதுக்கு மேலை கேள்வி கேட்டால் அவர் ஒரு அம்பு வச்சிருக்கிறார். "இவ்விதமான கேள்விகளுக்கெல்லாம் என்னால் பதிலளிக்க முடியாது" எண்டதே அந்த அம்பு. அதை எறிஞ்சு பத்திரிகைக்காரங்களை வாயடக்கிப் போட்டார்.

கேட்டதோ தமிழீழம். கிடைச்சதோ ஜப்பான் கார் எண்டு அண்டைக்கு கூட்டணிக்கு எதிராய் கறுப்பு மையாலை எழுதின மானத் தமிழர்களும் இருந்தினை. இண்டைக்கு எங்கள் எல்லாருக்கும் சுணை கெட்டுப் போச்சுது பாருங்கோ. படலையைத் தட்டி மைத்திரியை ஆதரியுங்கோ எண்டு பல்லிளிச்சு நிக்கேக்கை, பதிலுக்கு வாயெல்லாம் பல்லாக அவர்களை வரவேற்று மைத்திரிக்கு வாக்குப் போட எங்களிலை கனபேர் தயார். நேற்று மாவை வீடு தேடி வந்தவர் எண்டு சொல்லிப் பெருமைப்படலாமல்லே!


இதுக்கு மேலை மைத்திரியை சிறுபான்மை இனவாதிகளான கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரசும் ஆதரிக்க வெளிக்கிட்டது இனவாத சிந்தனையுடைய சிங்கள மக்கள் மத்தியிலை மகிந்த ராஜபக்சவின்ரை வாக்கு வங்கியை உயர்த்தத்தான் போகுது. உண்மையிலை மைத்திரி பொல்லுக் குடுத்து அடி வாங்கிறார் எண்டுதான் சொல்லலாம். அவளைத் தொடுவானேன் கவலைப் படுவானேன் எண்டு அவர் பாடத்தான் போறார் போலை.



# புதிர்ப்போட்டி இல. 22

**01,02ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல் களை அடிப்படையாய்க் கொண்டவை**

இவ்வாண்டு பெப்ரவரி மார்ச் ஆகிய மாதங் களில் நடைபெற்ற ஒரு கணிப்பீட்டில் இலங் கையின் கம்பனிகள் அவற்றின் விற்பனைக் கனவளவு பற்றித் தெரிவித்த துலங்கல்கள் உரு A யில் காணப்படுகின்றன. அடுத்த மூன்று மாதங்களில் அக்கம்பனிகளின் விற்பனைக் கன வளவுகள் அதிகரிக்குமா குறையுமா அவ் வாறே இருக்குமா என்னும் எதிர்பார்ப்புகள் உரு B யில் காணப்படுகின்றன. முந்திய கணிப் பீடுகளில் பெற்ற தரவுகள் இரு உருக்களிலும் அடைப்புக் குறிகளினுள்ளே தரப்பட்டுள்ளன




1) உரு A யில் தரப்பட்டுள்ள தகவல்களுக் கேற்ப பின்வரும் எக்கூற்று பிழையானது.?

(I) விற்பனைக் கனவளவு அதிகரித்த கம்பனிகளின் சதவீதம் ஏறத்தாழ 40% என முந்திய கணிப்பீடும் தற்போதைய கணிப்பீடும் காட்டுகின்றன

(II) முந்திய கணிப்பீட்டுடன் ஒப்பிடும் போது விற்பனைக் கனவளவு குறைந்த கம்பனி களின் சதவீதம் இருமடங்காகியுள்ளது.

(III) தமது விற்பனைக் கனவளவு மாறாமல் இருக்கின்றது. அல்லது குறைந்துள்ளது எனக் கம்பனிகளின் 60% ஆனவை குறிப்பிட்டுள்ளன.

(IV) குறிப்பிட்ட ஓரே கம்பனிகள் இரு கணிப் பீடுகளிலும் தமது விற்பனைக் கனவ ளவு அதிகரித்துள்ளதெனக் குறிப்பிடு கின்றன

(V) தமது விற்பனைக் கனவளவு மாறாமல் இருக்கின்றது. எனக் குறிப்பிட்ட கம்பனி களில் சதவீதம் தற்போதைய கணிப்பீட் டின் குறைந்துள்ளது

02) உரு Bயில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப பின்வரும் எக்கூற்று சரியானது?

(I) முந்திய கணிப்பீட்டுடன் ஒப்பிடும்போது கம்பனியில் கூடிய சதவீதம் அடுத்த மூன்று மாதங்களில் அவற்றின் விற்ப னைக் கனவளவு அதிகரிக்குமென எதிர்பார்த்திருந்தன

(II) முந்திய கணிப்பீட்டுடன் ஒப்பிடும்போது கம்பனிகளில் குறைந்த சதவீதம் அடுத்த மூன்று மாதங்களில் அவற்றின் விற்பனைக் கனவளவு மாறாமல் இருக்குமென எதிர்பார்த்திருந்தன

(III) தமது விற்பனைக் கனவளவு அதிகரிக்கு மென எதிர்பார்த்திருந்த கம்பனிகளின் சதவீதம் தமது விற்பனைக் கனவளவு குறையுமென எதிர்பார்த்திருந்த கம்பனிகளின் சதவீதத்திலும் பார்க்கக் கூடியதாகும்.

(IV) இரு கணிப்பிடுகளிலும் கம்பனிகளின் ஒரே சதவீதம் தமது விற்பனைக் கனவளவுகள் மாறாமல் இருக்குமென எதிர்பார்த்திருந்தன

(V) தமது விற்பனைக் கனவளவு அதிகரிக்கும் அல்லது குறையும் அல்லது மாறாமல் இருக்குமென எதிர்பார்த்திருந்த கம்பனிகளின் சதவீதங்கள் அண்ணளவாகச் சமமாகப் பிரிக் கப்பட்டிருக்கின்றனவெனத் தற்போதைய கணிப் பீடு காட்டுகின்றது

**அனுப்பவேண்டிய முகவரி**

புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**3,4 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் I,II,III இலக்கமிடப்பட்ட மூன்று விடயங் களுடன் ஒரு முடிவும் உள்ளது**

- விடயங்களில் யாதாயினும் ஒன்றைப் பயன் படுத்தி முடிவுக்கு வரமுடியுமெனின் Aயைத் தெரிந்தெடுக்க
- I,II ஆகிய விடயங்களைப் பயன்படுத்தி முடிவுக்கு வரமுடியுமெனின் B யைத் தெரிந்தெடுக்க
- I,III ஆகிய விடயங்களைப் பயன்படுத்தி முடிவுக்கு வரமுடியுமெனின் Cயைத் தெரிந்தெடுக்க
- I,III ஆகிய விடயங்களைப் பயன்படுத்தி முடிவுக்கு வரமுடியுமெனின் Dயைத் தெரிந்தெடுக்க
- விடயங்களில் ஒன்றையோ பலவற்றையோ பயன்படுத்தி முடிவுக்கு வர முடியாதெனின் E யைத் தெரிந்தெடுக்க

3) முடிவு : சுனிலிலும் பீற்றர் உயரங்கூடியவர்

(I) பீற்றரிலும் பரீத் உயரங்கூடியவர்

(II) பெரேராவிலும் சுனில் உயரங்கூடியவர்

(III) சஞ்ஜேயிலும் பெரேரா உயரங்கூடியவர்

(1) A (2) B 3) C
(4) D (5) E

4) முடிவு : 2011 ஜனவரி - பெப்ரவரி வெள்ளத்தின் போது கிழக்கு மாகாணத்தில் 60% ஆன குடும்பங்கள் இடம்பெயர்ந்திருந்தன

(I) கிழக்கு மாகாணத்தில் 25% ஆன குடும் பங்கள் இடம்பெயர்ந்திருந்த அதே வேளை அவர்கள் தமது ஆதனத்தையும் இழந்தனர்


(II) கிழக்கு மாகாணத்தில் 35%ஆன குடும்பங்கள் இடம்பெயரவில்லை

(III)கிழக்கு மாகாணத்தில் 35% ஆன குடும் பங்கள் இடம்பெயர்ந்த போதிலும் தமது ஆதனத்தை இழக்கவில்லை

(1) A (2) B 3) C
(4) D (5) E

**5,6 ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல் களை அடிப்படையாய்க் கொண்டவை**

உலகில் ஆபத்தை எதிர்நோக்கும் தொழில்களில் ஏறத்தாழ 80% ஆனவை ஆசிய நாடுகளில் உள்ளன. 2009 இல் நேபாளம், இந்தியா, பங்களா தேஷ், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுக ளில் ஆபத்தை எதிர்நோக்கும் தொழில்களில் ஈடுபட்டிருந்த ஆண்கள், பெண்கள் ஆகியோரின் பரம்பல் பின்வரும் வரைபில் காணப்படுகின்றது.




5) பின்வரும் எக்கூற்று பிழையானது?

(I) இலங்கையில் ஆபத்தை எதிர்நோக்கும் தொழில்களில் ஈடுபட்டிருந்த ஆண்களினதும் பெண்களினதும் மொத்த தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்களின் மொத்தத்தின் 50% ஆகும்.

(II) நேபாளத்திலும் இந்தியாவிலும் வேலை அணியில் 80% ஆனோர் ஆபத்தை எதிர் நோக்கும் தொழில்களில் ஈடுபட்டிருந்தனர்.

(III) பாகிஸ்தானில் முழுவேலை அணியிலும் 65% இற்கு மேற்பட்டோர் ஆபத்தை எதிர்நோக்கும் தொழில்களில் ஈடுபட்டி ருந்தனர்.

(IV) ஆபத்தை எதிர்நோக்கும் தொழில்களில். ஈடுபட்டிருந்தவர்களில் கூடுதலான சத வீதத்தினர் பங்களாதேஷில் இருந்தனர்.

(V) பங்களாதேஷில் தொழிலில் ஈடுபட்டிருந்த பெண்களில் 80% இற்கு மேற்பட்டோர் ஆபத்தை எதிர்நோக்கும் தொழில்களில் ஈடுபட்டிருந்தனர்.

6) பின்வரும் எதனைக் தரப்பட்ட வரைபிலிருந்து சரியாக உய்த்தறியலாம்?

(I) பெண்களிலும் பார்க்க ஆண்கள் ஆபத்தை எதிர்நோக்கும் வேலையை நன்றாகக் கையாள்வர்

(II)ஆபத்தை எதிர்நோக்கும் தொழிலில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே மிகவும் கூடிய வித்தியாசத்தைப் பாகிஸ்தான் காட்டுகின்றது

(III) ஆபத்தை எதிர்நோக்கும் தொழில் பெரும் பாலும் குறைந்த சம்பளத்தையும் கடினமான வேலை நிலைமைகளையும் கொண்டது

(IV) ஆபத்தை எதிர்நோக்கும் தொழில் துறைகளில் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் குறைவாகக் கணிக்கப்படலாம்

(V) எல்லா 5 நாடுகளிலும் ஆபத்தை எதிர்நோக்கும் தொழில்களில் ஆண்களிலும் பார்க்கப் பெண்கள் கூடுதலான சதவீதத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

**இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும் அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.**

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- ம.காருண்யா
தரம் :- 08
பாடசாலை:-யா/கொக்குவில் இந்துக்கல்லூரி

பெயர் :- ம.லவன்
தரம் :- 09
பாடசாலை:-யா/இந்துக்கல்லூரி

பெயர் :- க.தனுசா
தரம் :- 12
பாடசாலை:-யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

பெயர் :- றா.ஜனன்
தரம் :- 10
பாடசாலை:-யா/இந்துக்கல்லூரி

**விண்ணப்பதாரரின் விபரம்**

முழுப்பெயர் :- ------------------------------
பாடசாலை :- ------------------------------
கல்வி கற்கும் தரம் :- ------------------------------
வீட்டு முகவரி :- ------------------------------
தொ.பேசி இலக்கம் :- ------------------------------

## சென்றவார விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1.(I) | 2.(V) | 3.(I) | 4. (I) | 5. (II) |
| 6.(IV) | 7.(V) | 8.(IV) | 9. (III) | 10.(II) |

# முட்செடிகள் அகற்றப்படுமா?

# கேள்வி எழுப்பியுள்ளனர் மக்கள்

(யாழ்ப்பாணம்)

இளவாலை சித்திர மொழி சந்தியில் இருந்து சேந்தான் குளம் சந்தி வரையான பிரதான வீதியின் இருபுறமும் முட்செடிகள் வளர்ந்து காணப் படுவதால் குறித்த வீதியூடாக பயணம் செய்யும் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் பல் வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

வலி.வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட குறித்த வீதியில் உள்ள இம் முட்செடிகளை அகற்று வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? என பொதுமக்கள் கேள்வி எழுப்பி உள்ளனர். (66)

# மதுவுக்கு எதிரான விழிப்புணர்வு பிரசாரம்

மதுவுக்கு எதிரான பாரிய பிரசாரத்தை "ஹெல்தி லங்கா அமைப்பு யாழ். மாவட்டத்தில் தற்போது முன்னெடுத்து வருகின்றது.

மதுவுக்கு எதிரான விழிப்புணர்வு பிரசாரம் கடந்த வாரம் சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த பிரசார நடவடிக்கைகளில் மதுவால் ஏற்படும் பாதிப்புக்கள், மதுவால் ஏற்படும் குற்றச் செயல்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவு படுத்தும் சுவரொட்டிகள் ஒட்டுதல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் குழுக்களுக்கு மதுவைத் தவிர்க்கும்படி அறிவுறுத்தல்களும் இதன் போது வழங்கப்பட்டது. (48)

# ஆட்சேர்ப்பு

யாழ் மாவட்ட காணிப்பயன்பாட்டு திட்டமிடல் அலுவலகத்தில் நீண்டகாலமாக வெற்றிடமாக விருந்த சாரதி, அலுவலகப்பணியாளர் பதவிகள் திணைக்களத்தினால் நிரப்பப்பட்டுள்ளன.

அத்துடன் காணி அமைச்சினால் பிக்கப் வாகனமும் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. (08)

# நீதிமன்ற விடுமுறை

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதிலுமுள்ள நீதிமன்றங்களுக்கு கடந்த மாதம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து எதிர்வரும் திங்கட்கிழமை வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்றம் 7 ஆம் திகதி புதன்கிழமையும், உச்சநீதிமன்றம் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமையும் மீண்டும் ஆரம்பிக்கப்படும் இத் தினங்களிலிருந்து இந்நீதிமன்றங்களில் தொடர்ந்து வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (137)

# ஊடக கற்கைநெறி வடமராட்சியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கமும் N.C.A கல்வி நிறுவனமும் இணைந்து வடமராட்சிப் பகுதியில் இலவச ஊடக கற்கை நெறியை மூன்று மாதங்களுக்கு நடாத்த உள்ளது. இக் கற்கை நெறியில் க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி பயின்ற அனைவரும் பங்குபற்ற முடியும் என N.C.A கல்வி நிறுவன இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இக் கற்கை நெறியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கொழும்பில் உள்ள தனியார் ஊடக நிறுவனங்களிலும் அரச ஊடக நிறுவனங்களிலும் யாழில் உள்ள ஊடக நிறுவனங்களிலும் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதன் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# க.பொ.த.(உ/த) பெறுபேறுகள்

அண்மையில் வெளியான க.பொ.த.உயர்தர பரீட்சையின் சில பாடசாலைகளின் பெறுபேறுகள் விபரம் வருமாறு,

**பத்திரிசியார் கல்லூரி, கலைப்பிரிவு,**

என்.அஜந்தன் 3ஏ, எஸ்.டெனிக்ஷன் 2ஏ,பி, ஏ.பி.ஜான்கவி 2ஏ,சி, எஸ்.ஜெனீபன் 2ஏ,சி, பி.ஏ.கமலராஜ் ஏ, 2பி, எஸ்.அகிலன் ஏ,பி,சி, என்.மார்ஷன் ஏ,பி,சி, எஸ்.கே.நித்திராஜன் குலஸ் ஏ,2சி, ஆர்.ஜே.ஜோன்கில்ரன் ஏ,2பி, ஆர்.அலெக்ஷன் ஏ,2சி, ஜே.மல்கம் றோய் ஏ,பி,சி, ஏ.ஏ.பி.உசாந்தன் ஏ,பி,சி, ஏ.அருள்ராஜ் ஏ,2பி, பி.அன்ரன் றெயினோல்ட் 2பி, சி.

**விஞ்ஞானப்பிரிவு,**

ஜே.கே.எச்.சிறன் 3பி, எஸ்.சிறீபவன் 2பி,சி,

**கணிதப்பிரிவு,**

கே.சாரங்கன் 3பி,(தமிழ்மொழிமூலம்), ஜே.புலேந்திரன் (ஆங்கில மொழிமூலம்) 3பி.

**வர்த்தகப்பிரிவு,**

பி.நெல்ஜீவன் 3ஏ, வி.பிரசாந்தன் 2ஏ, பி, எஸ்.பெஞ்சமின் ஏ, பி,சி, சி.கதீசன் ஏ,பி,சி, எஸ்.பிரியங்கன் ஏ,பி,சி, ஜி.மயூரதன் 2பி,சி, ஏ.சுபனேசன் 2பி,சி, ஆர்.பௌபீசன் 2பி,சி.

**கிளி/கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயம்,**

**வர்த்தகப்பிரிவு,**

சி.கிரிதரன் 2ஏ,பி, ந.தேவகுலன் ஏ,2பி, தி.தேவகி 2பி,சி, ர.விதுசாயினி 2சி,எஸ்.

**கலைப்பிரிவு,**

தி.மிதுலா ஏ,2பி, சு.நிலந்தினி 3பி, சி.கோபிகா 2பி,சி, ச.சயந்தினி 2பி,சி, சி.தர்சிகா 2பி,சி, தெ.விநோத் பி,2சி, ப.ரசோந்தினி பி,சி,எஸ், வி.சிந்தாதேசி 3சி, சி.வானழகி 3சி, கு.கயலழகி 2சி,எஸ்.

# பாடசாலை உபகரணங்கள் மாணவர்களுக்கு அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

வல்வையில் 48 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு வல்வெட்டித்துறை சந்தியில் அமைந்துள்ள நவீன சந்தை கட்டடத் தொகுதியின் மேல் மாடியில் கடந்த திங்கட்கிழமை மாலை 04.30 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த அன்பளிப்புக்குரிய நிதியை லண்டனைச் சேர்ந்த சில நலன்விரும்பிகள் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாரம் ஒரு காரம்

## சம்பந்தரின் விளக்கம் சங்கடத்திற்குரியது



**"பொது எதிரணிக்கு ஆதரவளித்தமை ஏன்? – தமிழ் தேசிய கூட்டமைப்பு விளக்கம்"** எனத் தலைப்பிட்டு சம்பந்தரின் படத்துடன் கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை உதயன் பதிரிகையில் கட்டுரை வெளிவந்தது. வழமை போல் சம்பந்தரின் தப்பித்துக் கொள்ளும் தந்திரத்திற்கு ஏற்றாற் போல் அதன் வெளியீடுகள் இருந்தமையை அனைவராலும் உணரமுடிந்தது. இதை வாசித்த பலரிடத்தில் பல கோள்விகள் எழுந்துள்ளன. இவற்றிற்கும் கூட்டமைப்பு பதில் சொல்லுமா?

சொல்ல வேண்டும். காரணம் இதுவரை இவர்கள் சொன்னவை எவையும் அரங்கேறவில்லை.

1. **"பொது எதிரணிக்கு ஆதரவளித்தமை ஏன்"** எனத் தலைப்பிட்டுவிட்டு ஆதரவளித்தமைக்கான அர்த்தத்தை அவர்கள் சொல்லவில்லையே.... **மகிந்த செய்த துரோகங்கள** என பலவற்றைச் சொல்கின்றார்களே தவிர மைத்திரி அதை செய்யமாட்டார் என்றோ அல்லது எதைச் செய்வதாக உத்தரவாதம் தந்துள்ளார் என்றோ அங்கு சொல்லவிலையே. அது ஏன்?.....
2. மைத்திரியை ஆதரிப்பதற்கு அவருடன் நீங்கள் செய்ததாக கூறிவரும் இரகசிய ஒப்பந்தத்தை பகிரங்கப்படுத்தவதுதானே தமிழர்களின் பலம். ஏனதை நீங்கள் செய்யவில்லை?... சிங்கள பேரினவாதிகளிற்கு அஞ்சி அதை மறைக்கும்படி கூறும் மைத்திரி ஆட்சிக்கு வந்தால் அதை எப்படி துணிந்து நடைமுறைப்படுத்துவார்?....
3. **"நாட்டில் சர்வாதிகார ஆட்சி நிலவுகின்றது"** என்றீர்கள். அவ்வாறானால் பொது எதிரணி ஆட்சிக்கு வந்தால் அது நிகழாதா? இதுவரை இருந்த அரசுக்களெல்லாம் ஜனநாயக ஆட்சி நடத்தினவா?... அப்படியாயின் அக் கூட்டணியில் உள்ள சந்திரிக்கா, ரணில் ஆட்சியில் இருக்கும் போது ஏன் நீங்கள் தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்க்கவில்லை? முன்பு உங்கள் பரம எதிரி அவர்களல்லவா?... தமிழர் பிரச்சனைத் தீர்விற்கு தடையாக இருக்கும் சிங்கள இனவாதத்தை தோற்கடிக்கும் சக்தி முன்பு அவர்களிடம் இருந்ததா? அப்படியனால் உங்கள் மொழியில் அது என்ன ஆட்சி?....
4. 100 நாட்களில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கப்பட்டால் சிங்கள இனவாதக் கட்சிகளிடமிருந்து தமிழர்களுக்கான தீர்வை நீங்கள் வென்றெடுப்பீர்களா?.....பொறுத்திருந்து பார்ப்போம்
5. **"ராஜபக்ஷ ஆட்சி தமிழர்க்கு பாதகமானது"** என்கிறீர்கள். இதுவரை எந்த தென்னிலங்கை ஆட்சிகள் தமிழர்களுக்கு சாதகமாயின? அப்படியானால் ஏன் அன்று நீங்கள் தீர்வைப் பெற்றெடுக்கவில்லை?.....
6. **"தற்போது தமிழரின் வாழ்வாதாரம் கீழ் நிலையில் இருக்கின்றது"** என்கின்றீர்கள். பொருளாதாரத்தடையால் முன்பு தமிழர் வாழ்வு பொசுங்கிய நேரம் நீங்கள் கூறும் வாழ்வாதாரம் மேல் நிலையில் இருந்ததா?
7. **"முறையாக ஆட்சி அதிகாரம் பகிரப்பட வில்லை"** என்கின்றீர்கள். அப்படியானால் மலையக மக்களின் ஒன்பது ஆசனங்களையும் பறித்தது மகிந்த அரசா?... உங்களின் அமைச்சு பதவிக்கு மைத்திரியிடம் அப்பிளிக்கேஷன் போட்டாச்சா?

தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களுக்கு இடம் ஒதுக்குவதற்குக் கூட இனவாதக் கட்சிகளுக்கு அஞ்சிய பொது எதிரணியைத்தான் நீங்கள் ஆதரிக்கின்றீர்கள். அந்த எதிரணி ஆட்சிக்கு வந்தால் எப்படித் தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வைத் தரும். மகிந்த கூடத் தருவார் என்று நாம் சொல்லவில்லை தீர்வை நாம் தான் பெற்றெடுக்க வேண்டும். அதை எப்படி என்பது தான் இங்கு முக்கியம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பெரும்பான்மையிடமிருந்தும் தீவிர இனவாதக் கட்சிகளிடமிருந்தும் தமிழர்களுக்கு தீர்வை வென்றெடுக்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை நிச்சயம் தேவை. அதன்மூலம் தீவிர இனவாதக் கட்சிகளைத் தோற்கடித்து நினைத்ததை சாதிக்க முடியும். அதற்குரிய அணுகுமுறையையே தமிழர்கள் கைக்கொள்ள வேண்டும்.

இதனால் தான் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கூறினார் இலங்கையில் தமிழர்கள் மகிந்த அரசின் மூலமே தமது உரிமைகளை வென்றெடுக்க முடியுமென".... தாமும் சிந்தித்துத்தான் செயற்படுவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பும் கூறிவருகின்றது. அப்படியானால் சிந்தித்து முடிவெடுத்த அகிம்சைப்போர் ஏன் அரங்கேறவில்லை?.....

**2015 இல் தமிழர்களுக்கு மைத்திரி மூலம் தீர்வைப் பெற்றுத் தருவார்களாம். பொறுத்திருந்து தான் பார்ப்போமே புஸ்வாணம் எப்படி வெடிக்குதென்று....**

**- வெண்கட்டியன்**

# பேசாலையில் தொடரும் திருட்டு
## கட்டுப்படுத்த ரோந்துப் பணி

(மன்னார்)

மன்னார் பேசாலைப் பகுதியில் நிலவிவரும் திருட்டுச் சம்பவங்களை நிறுத்தும் முகமாக பேசாலை இளஞர்கள் கொண்ட குழுக்கள் பொலிஸாருடன் இணைந்து இரவில் ரோந்து செல்ல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் - பொதுமக்களுக் கிடையே இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அண்மைக் காலமாக பேசாலை பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் அச்சம் காணப்படுகின்றது.

இது விடயமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பேசாலை பங்கு தந்தை அருட்பணி எஸ்.வி.அவுதப் பர் அடிகளார் தலைமையில் புனித வெற்றி நாயகி ஆலய மண்டபத்தில் பொலிஸ் பொதுமக்களுக்கான பொதுக் கூட்டம் ஒன்று இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பேசாலை பொலிஸ் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி றிஸ்வி, இன்ஸ்பெக்டர் கே.ஜெயரூபன், வட மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிறிமூஸ் சிராய்வா, மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.மாட்டீன் டயஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக பொலிஸ் அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில்,

பேசாலை ஒரு பரந்த கிராமமாகும் இங்குள்ள பொலிஸ் சாவடியில் இப்பகுதிக்கேற்றவாறு பொலிஸ் ஆளணி மிகவும் பற்றாக்குறையாக இருக்கின்றது. அடுத்து இப் பகுதியில் பல வீதிகள் சந்திகள் இருக்கின்றபோதும் பெரும்பாலான இடங்கள் இருள்மயமாகவே காட்சி அளிக்கின்றன.

இது திருடர்களுக்கு சாதகமாக காணப்படுகின்றது. ஆகவே முதலில் இருள்சூழ்ந்துள்ள இடங்களில் மன்னார் பிரதேச சபை தெரு வெளிச்சம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து இப்பகுதியில் பொலிஸ் ஆளணி பற்றாக்குறையாக இருப்பதால் இப்பகுதி மக்களும் பொலிஸாருடன் இணைந்து செயற்பட வேண்டிய அவசியம் உண்டு எனத் தெரிவித்தனர்.

இப்பகுதியில் வெளி இடங்களைச் சார்ந்தவர்களே இங்கு வந்து திருட்டுக்களில் ஈடுபடுவது அண்மைக் காலமாக பொலிஸாரால் கண்டுப்பிடிக்கப்பட்ட திருட்டுச் சம்பவங்களிலிருந்து தெரியவருகிறது.

ஆகவே இங்குள்ள இளைஞர்கள் குழுக்களாகப் பிரிந்து நாளாந்தம் சுழற்சி முறையில் பொலிஸாருடன் இணைந்து இரவில் இந்தப் பகுதியில் ரோந்து செல்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

# வாழ்வாதார உதவி



முல்லைத்தீவு, கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்திற்குழ்பட்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக கோழிக்குஞ்சுகள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் வாழ்வாதார திட்டத்தின் கீழ் இவை வழங்கப்பட்டன.

கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்திற்குறபட்ட முள்ளியவளை, செம்மலை, சிலாவத்தை ஆகிய மூன்று வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 36 பயனாளிகளுக்கு 20 கோழிக்குஞ்சுகளும் கூடொன்றும் வழங்கப்பட்டது.

# அனர்த்த குறைப்பு வேலைத்திட்டம்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சால், கிளிநொச்சி மாவட்டத்தில் 103.95 மில்லியன் ரூபாய் செலவில் அனர்த்த குறைப்பு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாவட்டத்தில் ஏற்படும் அனர்த்தங்களை தவிர்க்கும் பொருட்டு, கல்வெட்டுக்கள் அமைத்தல், மண அணைகள் அகற்றுதல், குடிநீர் விநியோகம், அனர்த்தத்தை தாக்குப்பிடிக்கும் வேலைத் திட்டங்கள், அவசரகால நிதி கொடுப்பனவு, உலர் உணவுக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட 184 வேலைத்திட்டங்கள் மேற கொள்ளப்பட்டன.

இந்த வேலைத்திட்டங்களை மேற்கொண்டதில் கிளிநொச்சி மாவட்டத்தில் அனர்த்தங்களை குறைக்கக்கூடியதாகவிருந்ததாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யாழில் தீவிரமடையும் டெங்கு நோய்
# கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம்

யாழ் மாவட்டத்தில் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த பருவ மழைக்குப் பின்னர் டெங்குநோயின் பரம்பல் தீவிரமடைந்துள்ளது. கடந்த வருடத்தில் யாழ் மாவட்டத்தில் 1265 நோயாளர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த டிசம்பர் மாதத்தில் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 வயதுடைய சிறுவன் ஒருவன் டெங்குநோயினால் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம, நல்லூர், கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய், சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேச் செயலக பிரிவுகளில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் கூடுதலான நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் கடந்த டிசம்பர் மாதம் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய் ஆகிய சு.வை.அதிகாரி பிரிவுகளில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இருப்பினும் இப் பிரிவுகளில் டெங்கு நோயுடன் பல நோயாளிகள் புதிதாக இனம்காணப்பட்டு வருகின்றனர்.

இந் நிலையில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மீண்டும் தீவிரப்படுத்தும் நோக்குடன் இவ்வாரம் விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உள்ளதாக யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இத் திட்டங்களை ஒருங்கிணைக்கும் நோக்குடன் மாவட்ட மட்ட டெங்கு தடுப்பு செயலணிக்குழு கூட்டம் கௌரவ வட மாகாண ஆளுநர், அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு அமைவாக மேற்படி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் உட்பட்ட யாழ். மாவட்டத்தில் சகல பிரிவுகளிலும் டெங்குக் கட்டுப்பாட்டு விசேட வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. பிரதேச மடடத்தில் பிரதேச டெங்கு தடுப்பு செயலணி குழுவினை கூட்டி பிரதேச செயலாளரினால் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படும்.

கிராம மட்டத்தில் கிராம மட்ட டெங்கு தடுப்பு செயலணி குழுக்கள் கிராம அலுவலரின் தலைமையில் கிராம மட்ட பொது அமைப்புகளுடன் இணைந்து டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தல் வேண்டும்.

பல உள்ளூராட்சி மன்ற பிரதேசங்களில் திண்ம கழிவகற்றல் பொறிமுறை சீராக இல்லாமை டெங்கு நோயின் தீவிர பரம்பலுக்கு ஓர் காரணமாக உள்ளது எனவே சகல உள்ளூராட்சி மன்றங்களும் தம்மிடம் உள்ள வளங்களுடன் மேலதிக வளங்களையும் ஒன்று திரட்டி உடனடியாக செயற்படும் வண்ணம் திண்ம கழிவகற்றும் நடவடிக்கைகளை சீர் செய்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல கழிவு நீர் வாய்க்கால்களையும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் உடனடியாக செயற்படும் வண்ணம் சுத்திகரிப்புச் செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ் விசேட வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக, அன்று யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை சேர்ந்த வெளிக்கள உத்தியோகத்தர்கள் அனைவரும் யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட டெங்கு பரம்பல் தீவிரமாக உள்ள 10 கிராம அலுவலர் பிரிவுகளில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில ஈடுபடவுள்ளனர். இவர்கள் குழுக்களாக பிரிந்து இப் 10 கிராம அலுவலகர் பிரிவிற்கு உட்பட்ட அனைத்து வீடுகளையும், நிறுவனங்களையும் பார்வையிட்டு டெங்கு கட்டுப்பாட்டு ஆலோசனைகளை வழங்க உள்ளனர். எனவே பொதுமக்கள் அனைவரும் தமது வீடுகளிலும் சுற்றாடல்களிலும் டெங்கு நோயைப்பரப்பும் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இதேபோல இப் பிரதேச நிறுவனங்களின் தலைவர்களும் தமது நிறுவனத்தையும் சுற்றாடலையும் துப்புரவாக பேணுமாறும கேட்டுக் கொள்கிறோம்.

இதற்கு ஒத்துழைப்பு வழங்காத குடியிருப்பாளர்களுக்கும், நிறுவன தலைவர்களுக்கும் எதிராக சட் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்பதனை மனவருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறேன். இவ் விசேட வேலைத் திட்டத்தில சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களுடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுகாதார தொண்டர்கள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸார் ஆகியோர் ஈடுபடவுள்ளனர்.

இதேபோன்ற ஒரு டெங்கு விசேட வேலைத்திட்டம் எதிர்வரும் 03.01.2015 அன்று நல்லூர், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இடம் பெறவுள்ளது. இவ் விசேட வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக இவ் மூன்று பிரிவுகளிலும் விசேட டெங்கு நுளம்புகளுக்கு எதிராக புகையூட்டல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்போது யாழ் மாவட்டத்தில் டெங்கு தீவிரமாக பரவி உள்ள சூழ்நிலையில் எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி பாடசாலைகள் யாவும் முதலாம் தவணைக்காக ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்நிலையில் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் அவர்கள் ஊடாக சமூகத்திலும் டெங்கு நோய் மேலும் தீவிரமாக பரவக்கூடிய வாய்ப்புள்ளது.

எனவே யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட முதல் நாள் ஜனவரி 5 ஆம் திகதி மாணவர்களின் பங்களிப்புடன் சிரமதானம் மூலம் பாடசாலை வளாகமும் அதன் சுற்றாடலும் துப்பரவு செய்யப்பட வேண்டும்.

இதனை நடைமுறைப்படுத்துவதை பாடசாலை அதிபர்களும் வலய, கோட்டக்கல்வி பணிப்பாளர்களும் உறுதி செய்யவேணடும். இப் பணியை அப் பிரதேசத்திற்குரிய பொது சுகாதாரப் பரிசோதகர் மேற்பார்வை செய்து உறுதிப்படுத்துவார். துப்புரவு பணிகள் இடம்பெறாத டெங்குநோய பரவக்கூடிய சாதகமான சூழலினை கொண்ட பாடசாலைகளை அவை துப்பரவு செய்யப்படும் வரை மூடவேண்டி, நிர்பந்திக்கப்படலாம் எனவே தயவுசெய்து மாணவர்களின் நலன்கருதி சகல பாடசாலை அதிபர்களையும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

டெங்கு நோயானது சுகாதார திணைக்களத்தால் மட்டும் கட்டுப்படுத்த கூடியதல்ல. இதற்கு சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களினதும், நிறுவனங்களினதும் உள்ளூராட்சி மன்றங்களினதும், பொது அமைப்புக்களினதும், பொதுமக்களினதும் ஒத்துழைப்பு மிக அவசியமானது. எனவே யாழ். மாவட்டத்தில் பொதுமக்களை இந் நோயிலிருந்து காக்கவும் வீணான உயிர் இழப்புகளை தவிர்க்கவும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் தத்தமது பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொது மக்கள் தமக்கு காய்ச்சல் ஏற்பட்டு டெங்கு நோயாக இருக்கும் என சந்தேகித்தால் உடனடியாக அருகிலுள்ள அரச மருத்துவமனையில் மருத்துவ ஆலோசனையை உடன் பெற்றுக கொள்ளவும். சில நோயாளர்கள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று மிக ஆபத்தான நிலையில் அரச வைத்தியசாலைகளுககு இடமாற்றப்பட்டு வீணாக உயிர் இழப்புகள் ஏற்படுவதை எம்மால் அவதானிக்க முடிகிறது.

மேலும் டெங்கு காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் ஆகக் குறைந்தது 5 நாட்களேனும் பூரண ஓய்வில் இருக்கவேண்டும். வேலைக்கு செல்பவர்களும, பாடசாலை மாணவர்களும் வேலைத்தளத்திற்கும், பாடசாலைக்கு செல்வதையும் தவிர்த்து குறைத்து 5 நாட்களேனும் ஓய்வில் இருக்கவேண்டும்.

போதிய நீர் ஆகாரங்களை அருந்த வேண்டும். காய்ச்சல் ஏற்படும் போது பரிசிற்றமோல் வில்லைகளை மட்டும் தமது வயதுக்கு ஏற்ற அளவில் பாவிக்க வேண்டும். டெங்குநோய் என சந்தேகித்தால் உடனடியாக அருகில் உள்ள அரச மருத்துவமனையில் காலம் தாழ்த்தாது மருத்துவ ஆலோசனையை பெறவேண்டும்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை,
யாழ்ப்பாணம்.

தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015


பகுதி - I

1.30 மணி

# கல்வி முரசு


கீழே தரப்பட்ட படங்களை நன்கு அவதானித்து ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பைப் பெற எந்த இரு படத்தைப் பொருத்த வேண்டும்

(1)



(I) (II) (III)


(2)



(I) (II) (III)

கீழே தரப்பட்ட அமைப்பை அவதானித்து வெற்றிடங்களில் வரும் எண்களைக் கண்டு பிடித்து எழுதுக

(3)




(I) (II) (III) (IV)


(4)




(I) (II) (III) (IV)


புள்ளிக்கோட்டில் வரும் விடையைக் கண்டு கீறிடுக

(5)




(I) 29
(II) 44
(III) 50

(6)





(I) 42 (II) 32 (III) 22




தரப்பட்ட அமைப்பில் முதல் உருவை ஒத்த உரு எதுவெனக் கண்டு கீறிடுக

(23)





(24)





தரப்பட்ட படத்தில் ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பு பெறப்பட வேண்டுமானால் எந்த அமைப்பை மேலிருந்து பார்த்தால் கிடைக்கும்

(25)





(26)





வினாக்குறி வந்துள்ள இடத்தில் வரும் விடையைக் கண்டு பிடித்து கோடிடுக

(27)




(I) 36 (II) 33 (III) 39


(28)




(I) 02
(II) 03
(III) 01

புள்ளிக்கோடுள்ள இடத்தில் வரும் விடை யாது?


(29)




நேற்று பிரசுரமாகிய பயிற்சி வினாக்களின் விடைகள்


| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (01). 2 | (02). 3 | (03). 1 | (04). 1 | (05). 2 | (06). 2 | (07). 3 | (08). 3 | (09). 2 | (10). 3 |
| (11). 1 | (12). 1 | (13). 1 | (14). 3 | (15). 2 | (16). 2 | (17). 1 | (18). 1 | (19). 3 | (20).3 |
| (21). 1 | (22). 1 | (23). 3 | (24). 3 | (25). 1 | (26). 1 | (27). 1 | (28). 2 | (29). 3 | (30).1 |
| (31). 2 | (32). 1 | (33). 2 | (34). 1 | (35). 3 | (36). 2 | (37). 3 | (38). 2 | (39). 3 | (40).3 |

(07)



(I) 15 (II) 26 (III) 23


(08) கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து வினாக்குறி வந்த இடத்தில் வரும் விடையைக் கண்டு கீறிடுக




(I) 12 (II) 18 III) 14

கீழே தரப்பட்ட அமைப்பை அவதானித்து அடுத்துவரக் கூடிய அமைப்பு எதுவெனக் கண்டு கீறிடுக

(09)



(10)



கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து புள்ளிக்கோட்டில் வரும் விடையின் கீழ் கோடிடுக

(11)
4 8 2
3 - 9
1 1 3

(I) 8 (II) 7 III) 6

(12)
6 4 5
1 - 8
7 . 8 3

(I) 4 (II) 3 III) 6

(13)
5 7 2
3 - 2
9 - 4

(I) $\frac{4}{2}$ (II) $\frac{3}{0}$ III) $\frac{6}{4}$


A=10 B=5 C=2 D=4

(14) $\frac{A}{C}$ x D = ................ (I) 08 (II) 20 III) 25

(15) B x C = ................ (I) 06 (II) 07 III) 08


கீழே தரப்பட்ட கணிதச்செய்கையை அவதானித்து நிறந்தீட்டப்பட்டவை என்ன பின்னம் எனக் காண்க

(16)



(I) $\frac{1}{2}$ (II) $\frac{5}{8}$ III) $\frac{3}{4}$





(I) $\frac{1}{4}$ (II) $\frac{1}{5}$ III) $\frac{3}{8}$


(18) தரப்பட்ட அமைப்பு  என்ற அமைப்பை பெற வேண்டுமானால் மூன்று விடைகளில் எதனை அவதானித்தால் கிடைக்கும்



(I) (II) (III)


(19) தரப்பட்ட அமைப்பில் எத்தனை பெட்டிகள் உள்ளன

(I) 10 (II) 18 III) 19




தரப்பட்ட தகவலை அவதானித்து அடுத்து வரும் உரு எதுவெனக் கண்டு கீறிடுக

(20)




(21)



தரப்பட்ட தாயக்கட்டை ஏதோ ஒரு விதத்துக்கேற்ப திருப்பப்பட்டுள்ளது. அதற்கேற்ப இலக்கம் 4க்கு எதிர் திசையில் இருப்பது எது?

(22)



(I) 6 (II) 3 (III) 1

# முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு ஓய்வூதியம் வழங்க திட்டம்

முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு ஆயுள் காப்புறுதி மற்றும் ஓய்வூதியம் வழங்கும் திட்டமொன்றை வாழ்வெழுச்சி திணைக்களம் நடைமுறைப்படுத்த ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளது.

ஜனாதிபதியின் விசேட பணிப்புரையின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் பொருட்டு முசசக்கரவண்டி சாரதிகளிடமிருந்து தேவையான தகவல்களை பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் வாழ்வெழுச்சி திணைக்களத்தின் ஊடாக அனைத்து கிராமசேவகர் பிரிவுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் முச்சக்கரவண்டி சாரதிகள் தமக்கான விண்ணப்பப் படிவங்களை தமது கிராம சேவகர் பிரிவில் பணியாற்றும் வாழ்வெழுச்சி திட்ட உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென நல்லூர் சங்கிலியன் தோப்பு கிராம சேவகர் பிரிவுக்கான உத்தியோகத்தர் சுபநாதன் தெரிவித்தார்.

குறித்த சாரதி முச்சக்கர வண்டியின் உரிமையாளராக இருந்தாலும் அல்லது பிறிதொருவரின் வண்டியில் சாரதியாக பணியாற்றுபவராக இருந்தாலும் இந்த திட்டத்தில் இணைந்து கொள்ள முடியுமென அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் வயதான காலத்தில் தொடர்ந்து தொழிலை மேற்கொள்ள முடியாத நிலையில் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் சாரதிகளுக்கு ஆறுதலளிக்கும் ஒரு திட்டமாக அமையுமென முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்திக் கொண்டுள்ள சாரதி யொருவர் தெரிவித்தார். (24)

# யாழ். அரச அதிபரை சந்தித்தார் இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர்



இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஜோன் ரங்கின் நேற்று யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ளார்.

நேற்று காலை யாழ்ப்பாணம் வருகை தந்த இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஜோன் ரங்கின் யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை சந்தித்து தேர்தல் தொடர்பான நிலைப்பாடுகள் குறித்து கலந்துரையாடினார்.

இதன் போது வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களுக்கான பாதுகாப்பு, ஆளணி விடயங்கள், பணிக்கு அமர்த்தப்படும் ஆளணிக்கு வழங்கப்படும் பயிற்சிகள், போக்குவரத்து ஏற்பாடுகள், அரசியல் பிரமுகர்களின் ஒத்துழைப்பு தொடர்பாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடம் விளக்கமாக கேட்டறிந்த இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் சிறப்பாக நடைபெற தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

# வாக்குரிமையை வலியுறுத்தி விழிப்புணர்வு வீதி நாடகம்



வாக்குரிமையை வலியுறுத்தும் விழிப்புணர்வு வீதி நாடகத்தை தேர்தல் ஆணையாளர் நேற்றுமுன்தினம் இரவு பார்வையிட்டார்.


வவுனியா கச்சேரியில் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற இந் நாடகத்தை வட மாகாணத்தின் 5 மாவட்ட அரசாங்க அதிபர்களும் பிரதித் தேர்தல் ஆணையாளரும் இணைந்து பார்வையிட்டிருந்த[illegible]

மாவட்ட [illegible]சாங்க அதிபர்களுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்பாக மக்களை வாக்களிக்க வலியுறுத்தியும் வாக்குரிமையின் முக்கியத்துவம் குறித்தும் தேர்தல் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விழிப்புணர்வு தெரு நாடகம் அரங்கேற்றப்பட்டிருந்தது.

இதனையடுத்து வவனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் பிரதி தேர்தல் ஆணையாளர், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாண அரசாங்க அதிபார்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அரச உயரதிகாரிகளுடனான தேர்தல் தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

# மார்கழித் திருவெம்பாவை

## இன்று 8ஆம் நாள்



**உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளான சிவபெருமானைப் புகழ்ந்தும் அவருடைய அருட்பெருங்கருணையை வியந்தும் மணிவாசக சுவாமிகளால் திருவாய் மலர்ந்து அருளிச செய்யப்பெற்ற தித்திக்கும் தீந்தமிழ்ப் பனுவல் திருவாசகம். அந்த இனிய திருவாசகத்தில் வரும் ஓர் இனிய பகுதி தான் திருவெம்பாவை. அந்த விசேட பதிகமான திருவெம்பாவை பத்து நாட்களுக்கு எல்லா ஆல யங்களிலும் ஓதப்படுகின்றது.**

அந்தத் திருவாசகத்தேனின் துளிகளான "திருவெம்பாவை இருபது" பாடல் களையும் அதற்கான பொருள் விளக்கத்துடன் தினம் இரண்டு பாடல்கள் வீதம் "தினமுரசு" வாசகர்களுக்குத் தருகின்றோம். படித்துப் பயன்பெறுக.

**திருவெம்பாவை**



காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடச் சூழ்கொன்றைத் தார் பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்!

**பொருள்விளக்கம்.**

அழகிய பெண்களே! எமது காதுகளில் அணிந்திருக்கும் தோடுகள் அசைந்தாட, உடம்பிலே அணிந்திருக்கும் அழகான பசும்பொற்கலன்கள் அசைந்தாட, எமது கூந்தலாட, அக்கூந்தலில் சூடியிருக்கும் மலர் மாலைகள் ஆட, அந்த அழகிய மலர்களில் மொய்க்கின்ற வண்டுகளின் கூட்டம் எழுந்து அசைந்து ஆடக் குளிர்ந்த தண்ணீரில் மூழ்குவோம். மகிழ்ச்சியோடு நீராடி மகிழ்வோம். எமது சிவபெருமான் ஆடுகின்ற திருச்சிற்றம்பலத்தைப் பாடி, வேதத்தின் பொருளைப்பாடி, அந்த வேதத்தின் மறைப்பொருள் ஆமாறு பாடி, மூன்று சுடர்களுக்கும் ஒளிகொடுக்கின்ற ஒளிமயமான சிவனின் திறங்களைப் பாடி, அவன் திருமுடியைச் சூழ்ந்துள்ள கொன்றை மாலையைப் பாடி, அவன் எல்லாப்பொருளுக்கும் முதல்வனாய் விளங்கும அந்த முதன்மையைப் பாடி, முடிவில்லாத முடிவையும் பாடி ஏனைய உயிர்களிலும் நம்மை வேறுபடுத்திச் சிறப்புற வைத்து மேல் நிலையிலும் வைத்து அருள புரிகின்ற வளையல்கள் அணிந்த திருக்கரங்களையுடைய இறைவியின் திருவடிகளின் சிறப்பையும் பாடி குளிர்நீரில் மூழ்கி நீராடி மகிழ்ந்திருப்போமாக என்பதாம்.

ஒரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களி கூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற்கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண் முலையீர் வாயார நாம் பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

**பொருள் விளக்கம்.**

அழகான கச்சணிந்து எழிலுடன் தோன்றும் மார்பகங்களை உடைய மங்கையே! எனது தோழியானவள் ஒவ்வொரு நேரமும் எம்பெருமானே! சிவபெருமானே!! என்று வாய் ஓயாமல் சொல்லிக்கொண்டே இருக்கின்றாள். ஒரு சமயம் எம்முடைய மகாதேவனான சிவனை வாய் ஓயாமல் பேசுகின்றாள். அதனால் உண்டான மனமகிழ்ச்சியால் அவளுடைய கண்கள் அருவியைப் போல கண்ணீரைச் சுரக்கின்றன. வெறுந்தரையில் நிலத்திலே விழுந்து சிவபெருமானை வணங்கியவள் அப்படியே தன்னை மறந்து கிடக்கின்றாள். இவள் மற்றப்படி விண்ணோரைப் பணிந்து வணங்கவே மாட்டாள். தனிப் பெருந்தலைவனான பேரரசாக விளங்கும் சிவபெருமான் மேல் பித்துக்கொண்டு தலைவனான பேரரசாக விளங்கும் அன்பு செய்து பக்தி காட்டும் தன்மை இப்படித்தான் போலும இவ் வண்ணம் ஆட்கொள்ளும் அந்த வித்தகர் யாரோ? ஞானமே வடிவான சிவ பெருமானேதான். அவருடைய திருவடிகளை வாயாரப்பாடி வணங்குவோம் வாருங்கள். அழகிய மலர்கள் நிறைந்த தண்ணீரில் இறங்கிப் பாய்ந்து பாய்ந்து ஆடுவோமாக என்பதாம்.



முன்னணிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத்திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தெம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்!

**பொருள் விளக்கம்.**

மேகமே! நீ கடலினை நெருங்கி அதன் நீரை முகந்து அக்கடலைக் குறைத்து, எங்களை ஆளாக உடையவளாகிய உமாதேவியாரின் சிற்றிடையைப் போல மின்னிப் பொலிவுற்று எம்பெருமாட்டியின் திருவடிகளில் அணியப்பெற்ற பொன்னாலான சிலம்பைப்போலச் சிலம்பி திருப்புருவம் எனும்படி வானவில் குலவி நம்மையெல்லாம் அடிமையாக உடைய எம்பெருமாட்டியை கணமேனும் விட்டுப்பிரியாத சிவபெருமான் அன்பர்களுக்கும் அருள்புரிபவராவார். எனவே, எமக்கு முந்தி வந்து நெருங்கிச் சொரிகின்ற அன்னையின் இனிமையான அருளைப்போல மழையைப் பொழிவாயாக. அதாவது, உலகமாதாவாக விளங்குகின்ற ஆதிபராசக்தியான உமாதேவியாரின் இன்னருள்போல மழை பெய்யவேண்டும் என்பதாம்.

*சிவநெறிக் கலாநிதி*
*இராசையா ஸ்ரீதரன்*

# சோகத்தில் முடிந்தது புத்தாண்டு

## சீனாவில் நெரிசலில் சிக்கி 36பேர் பலி

(ஷங்காய்)

உலகம் முழுவதும் நேற்று முன்தினம் புத்தாண்டு வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டுள்ள நிலையில் சீனாவில புத்தாண்டு கொண்டாட்டம் சோகத்தில் முடிவடைந்தது.

சீனாவில் உள்ள ஷாங்காய் நகரில் புத்தாண்டுக்கொண்டாட்டத்தில் மக்கள் ஈடுபட்டுக் கொணடிருந்த போது கடும் நெரிசல் ஏற்பட்டது. இதில் 36 பேர் பலியானார்கள். 42 பேர் படுகாயமடைந்தனர். ஷாங்காய் நகரின் ஹுவாங்பு நதிக்கரையின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள க்ளீமிங் பன்ட் பகுதியில் மக்கள் பெருமளவில் திரண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்ட போது இந்த அசம்பாவித சம்பவம் நடைபெற்றுள்ளது. கடந்த புதன்கிழமை இரவு 11:35 மணியளவில் இச்சம்பவம் நடந்தது. பலியான 35 பேரில் 25 பேர் பெண்கள் ஆவார்கள்.

காயமடைந்தவர்கள் அனைவரும் 20 வயதிற்குட்பட்டவர்கள் என்றும் அவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் எனவும் தெரிகிறது. இச்சம்பவத்திற்கான காரணம் குறித்து காவற்றுறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இச்சம்பவத்தில் உயிர் பிழைத்த ஒருவர் கூறுகையில்,

நாங்கள் அனைவரும் முக்கிய சாலையின் ஓரத்தில் படித்துறையில் நின்று ஒளி வெள்ளத்தில் ரம்மியமான நதியின் அழகை ரசித்துக்கொண்டிருந்த போது, கூட்டம் அதிகரிக்க தொடங்கியது. அப்போது ஒரு சிலர் படியிலிருந்து கீழ் நோக்கியும், வேறு சிலர் மேல் நோக்கியும் நகர்ந்ததால் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது என அவர் கூறினார்.

ஆனால் வேறு சிலர் கூறுகையில், அங்குள்ள பாரில் ஒரு சிலர் அமெரிக்க டொலர் தாள்களை போன்ற கூப்பன்களை வீசியெறிந்ததால் நெரிசல் ஏற்பட்டதாக கூறியுள்ளனர். மூன்றாவது மாடியிலிருந்து வீசப்பட்ட இந்த கூப்பன்களை சேகரிக்கும் நோக்கில நதிக்கரையில் இருந்த மக்கள் கூப்பன்கள் விழுந்த இடத்தை நோக்கி ஒரே சமயத்தில் முன்னேற முனைந்ததால் இவ்விபத்து நேரிட்டதாக் கூறியுள்ளனர்.

உலகச் செய்திகள்

## பிலிப்பைன்ஸில் வெள்ளம் நிலச்சரிவு பலி எண்ணிக்கை 53ஆக உயர்வு

பிலிப்பைன்ஸின் மத்திய பகுதியில் கடந்த மூன்று நாட்களாகப் பெய்துவரும் பலத்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்திலும், நிலச்சரிவுகளிலும் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 53-ஆக அதிகரித்தது.

அந்நாட்டில் வீசி வரும் "ஜங்வி" புயலின் தீவிரம் குறைந்ததையடுத்து அங்கு பலத்த மழை பெய்து வருகிறது.இந்த மழையால் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி சமர் மாகாணத்திலுள்ள காட்பலோகன் நகரில் 19 பேர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து இந்தப் புயலின் பாதிப்புகளால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 53-ஆக உயர்ந்துள்ளது.பிலிபைன்ஸில், இதற்கு முன்பு வீசிய "ஹகுபிட்" புயலில் உயிரிழந்தவர்களைவிட இம்முறை மூன்று மடங்கு அதிக அளவில் உயிரிழப்புகள் நேர்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், ஜங்வி புயலால் 1,21,737 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் 80,186 பேர் மட்டுமே பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

புயலால் அடிக்கடி பாதிக்கப்படும் பிலிபைன்ஸில், ஆண்டுக்கு 20 முறையாவது புயல் வீசி வருகிறது. அதனால் ஏராளமான உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு பிலிபைன்ஸில் வீசிய ஹையான் புயலில் சிக்கி 7,350 பேர் உயிரிழந்தனர்.

## பாகிஸ்தான் இராணுவத்தின் அத்துமீறலால் காஷ்மீரில் விடிய விடிய தாக்குதல்



ஜம்மு-காஷ்மீரில் சர்வதேச எல்லையில் இந்திய நிலைகளைக் குறிவைத்து பாகிஸ்தான் இராணுவம் கடந்த புதன்கிழமை முதல் நேற்றுமுன்தினம் காலை 6 மணி வரை தாக்குதல் நடாத்தியுள்ளது.

சம்பா மாவட்டத்தில், 13 இந்திய நிலைகளைக் குறிவைத்து பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தியதாக எல்லைப் பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, புதன்கிழமை இரவு சர்வதேச எல்லையில் இந்திய வீரர்கள் ரோந்துப்பணியில் ஈடுபட்டபோது, பாகிஸ்தான் தரப்பிலிருந்து தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில், ஸ்ரீராம் கவுரியா என்ற வீரர் உயிரிழந்தார். மற்றொரு வீரர் காயமடைந்தார்.

இந்திய வீரர்கள் கடும் பதிலடி கொடுத்தனர். இதில், 4 பாகிஸ்தான் வீரர்கள் உயிரிழந்தனர். தங்கள் வீரர்களின் மரணத்தால் பாதிப்படைந்த பாகிஸ்தான் இராணுவம் வெள்ளைக் கொடி காட்டி, தாக்குதலை நிறுத்தும்படி கோரியது. இறந்த வீரர்களின் உடல்களை எடுத்துச் செல்வதற்காக பாகிஸ்தான் இராணுவம் அவ்வாறு கோரியது. அவர்களின் கோரிக்கைக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்திய தரப்பு தாக்குதலை நிறுத்தியது.

## தீவிரவாதிகளுக்கு எதிரானதாக்குதல் பாக்.இல் இதுவரை 1700பேர் பலி

பாகிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலில் இதுவரை 1700 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் இடங்களை குறிவைத்து, போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் 23 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு வசிரிஸ்தானின் ஹாவால் பகுதியில் தீவிரவாதிகளின் மறைவிடங்களைக் குறிவைத்து, போர் விமானங்கள் மூலம் இராணுவத்தினர் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

இதில் தீவிரவாதிகளின் பதுங்குமிடம் அழிக்கப்பட்டதுடன், 23 தீவிரவாதிகள் பலியானதாக இராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக கடந்த வெள்ளிக்கிழமை ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய ஓராக்ஹாய் மற்றும் கைபர் பழங்குடி மாவட்டங்களில் இராணுவம் தீவிர சோதனை நடத்தியது.

அப்போது தீவிரவாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே ஏற்பட்ட கடும் மோதலில் 16 பேர் கொல்லப்பட்டனர், 20 பேர் காயம் அடைந்தனர்.

கடந்தாண்டு ஜூன் மாதம் கராச்சி விமான நிலையத்தில் தலிபான்கள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலில் இதுவரையிலும் 1700 பேர் கொல்லப்பட்டுள்ளனர

## ஜெயா மேன்முறையீட்டுமனு விசாரணை ஒத்திவைப்பு

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கின் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு ஒத்திவைத்து கர்நாடக உயர் நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வு உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக, ஜெயலலிதா மேல்முறையீட்டு மனுவை விசாரிக்க சிறப்பு அமர்வு நீதிபதியாக சி.ஆர்.குமாரசாமி நேற்றுமுன்தினம் மாலை நியமிக்கப்பட்டார்.

இதனையடுத்து ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி வார விடுமுறை நாட்கள் தவிர நாள் தோறும் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், சிறப்பு அமர்வு நீதிபதி சி.ஆர்.குமாரசாமி விடுப்பில் உள்ளதால், அவருக்கு பதிலாக விசாரணை நீதிபதியாக பில்லப்பா ஆஜரானார்.

ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர் பி.குமார், வழக்கு விசாரணையை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். ஆனால், வழக்கு விசாரணையை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

## எல்.ஐ.சி.கிரெடிட் காட் அரபு நாடுகளில் அறிமுகம்



வெளிநாடுகளில் முதன் முறையாக எல்.ஐ.சி. நிறுவனம் கிரெடிட் காட்டுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இது குறித்து எல்.ஐ.சி., தேசிய தலைமை செயலக அதிகாரி ராஜேஸ் கந்த்வால் கூறியதாவது: இந்தியாவின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான எல்.ஐ.சி. நிறுவனம் கடந்த 1989ஆம் ஆண்டு முதல் வெளிநாடுகளில் எல்.ஐ.சி. தேசியம் என்ற பெயரில் தனது எல்லையை விரிவுபடுத்தியது. பக்ரைன் நாட்டில் முதன் முறையாக தனது கிளையை ஆரம்பித்தது. தற்போது ஐக்கிய அரபு நாடுகளில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான இந்தியர்கள் இந்நிறுவனத்தில் பணி புரிந்து வருகின்றனர்.

கடந்த 2013ஆம் ஆண்டு சிறந்த நம்பகத்தன்மை கொண்ட நிறுவனமாக தேர்வு பெற்றது. இதனையடுத்து துபாயில் இயங்கி வரும் பர்ஸ்ட் கல்ப் ஆப் பேங்க் மூலம் ஜீவன் நிவேஷி காப்புறுதியை 8 வாரங்களில் 100 மில்லியன்டாலர் அளவிற்கு விற்று சாதனை படைத்துள்ளது. இதனை தொடர்ந்து வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் வசதியை அளிக்கும் விதமாக கோ-பிராண்டட் கிரெடிட் கார்டுகளை எல்.ஐ.சி.,நிறுவனம் கிரெடிட் காட்டுகளை அறிமுகம் செய்துள்ளது என தெரிவித்துள்ளார்.

## இந்தோனேஷியாவில் மீட்புப்பணி ஸ்தம்பிதம்



கடந்த 28 ஆம் திகதி இந்தோனேஷியாவின் சுரபயா நகரிலிருந்து சிங்கப்பூருக்கு 162 பேருடன் புறப்பட்டு நடுவானில் மாயமான விமானத்தின் உடைந்த பாகங்கள் கரிமதா ஜலசந்தி கடல் பகுதியிலிருந்து கடந்த புதன்கிழமை கைப்பற்றப்பட்டன.

அப்பகுதியில் பயணிகளின் சடலங்கள் ஆங்காங்கே மிதப்பதையும் மீட்புக் குழுவினர் கண்டறிந்துள்ளனர். அங்கு வானிலை மோசமாக உள்ளதால் மீட்புப் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் 40 சடலங்கள் மீட்கப்பட்டதாக கடற்படையினர் கடந்த செவ்வாய்க்கிழமை கூறியிருந்தனர். ஆனால், தேடுதல் மற்றும் மீட்பு அமைப்பு 3 சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டதாகக் கூறியதையடுத்து முந்தைய அறிவிப்பு வாபஸ் பெறப்பட்டது.

நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட சடலங்களில் ஒன்று லைப் ஜாக்கெட்டுடன் இருந்தமை பல்வேறு சந்தேகங்களை எழுப்பி உள்ளது. விமானம் தண்ணீரில் விழுவதற்கு சுமார் ஒரு நிமிடமாவது ஆகியிருக்கும். எனவே, லைப் ஜாக்கெட் அணியுமாறு பயணிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

# வெடித்துச் சிதறிய படகு; இந்தியக் கடலில் மர்மம்

பாகிஸ்தானில் இருந்து வந்ததாக கருதப்பட்ட ஒரு மீன்பிடிப் படகை இந்தியக் கடலோரக் காவல்படையினர் மடக்கிப்பிடிக்க முயன்றதை அடுத்து, அப்படகு இந்திய கடலில் வெடித்துச் சிதறியது என்று இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தப் படகில் பயணித்தவர்கள் படகுக்கு தீ மூட்டினர் என்றும் அதன் காரணமாக படகு வெடித்துச் சிதறியது என்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அந்த மீன்பிடிப் படகில் காணப்பட்ட நால்வரும் உயிரிழந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

அவர்கள் தப்பிப்பதற்காக படகின் வேகத்தை அதிகப்படுத்தியபோது, அதை தடுத்து நிறுத்த தாங்கள் முயற்சிகளை மேற்கொண்டனர் எனவும் இந்தியக் கடலோரக் காவல்படையினர் தெரிவித்தனர்.

உளவுப்பிரிவு அளித்த தகவலை அடுத்து கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி நள்ளிரவில் இந்திய - பாகிஸ்தான் சர்வதேச கடற்பகுதியில் சந்தேகத்துக்குரிய வகையில் நடமாடியதை அடுத்தே அந்தப் படகை தொடரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்று இந்திய அரச தரப்பு கூறுகிறது.

அரபிக் கடற பகுதியில், கராச்சியிலிருந்து வந்த மீன்பிடிப் படகொன்று சட்டவிரோதமான வகையில் சில பரிமாற்றங்களைச் செய்யவுள்ளன என தகவல் கிடைத்ததை அடுத்து ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு, பாதுகாப்புப் படையினர் விமான உதவியுடன் அந்தப் படகை அடையாளம் காணும் நடவடிக்கையை மேற்கொண்டனர் எனவும் இந்தியக் கடலோரக் காவல்படையினர் தெரிவித்துள்ளனர்.

பின்னர் 31 ஆம் திகதி நள்ளிரவில் குஜராத் மாநிலம் போர்பந்தர் நகருக்கு மேற்கு - வடமேற்கே சுமார் 365 கிலோமீற்றர் தொலைவில் மேலதிக விசாரணைகளுக்காக படகை நிறுத்துமாறு எச்சரித்தனர் எனக் கூறும் கடலோரக் காவல்படையினர், அதற்கு செவிமடுக்காமல் அப்படகு தனது வேகத்தை அதிகரித்து, இந்தியக் கடல் எல்லையிலிருந்து தப்பித்துச் செல்ல முயன்றது எனக் கூறியுள்ளனர்.

அந்தப் படகில் இருந்த நால்வரும் அனைத்து எச்சரிக்கைகளையும் புறந்தள்ளி, விசாரணைகளுடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டனர் எனக் கூறும் அந்தச் செய்திக் குறிப்பு, பின்னர் அவர்கள் படகின் கீழ்த்தளத்துக்குச் சென்று அதற்கு தீ மூட்டினர் என்றும், அதன் காரணமாக படகு வெடித்துச் சிதறி தீப்பற்றிக் கொண்டது எனறும் கூறுகிறது.

## மக்கள் வெள்ளத்தில்...

கொண்டு பங்குபற்றினர். இவர்கள் தமது ஆதரவை வெளிக்காட்டும் வகையில் ஜனாதிபதி மகிந்தவின் உருவப்படம் பொறிக்கப்பட்ட உடைகளுடனும் கொடிகளுடனும் கூடியிருந்தனர்.

பிரமாண்டமான கொட்டகையில் நடைபெற்ற இப்பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறப்புரையாற்றியதுடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் ஜனாதிபதியை ஆதரித்து உரைநிகழ்த்தினர்.

இதில் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, அமைச்சர் குமார வெல்கம, அமைச்சர் திஸ்ஸ விதாரண, வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், ஏ.எச்.எம்.அஸ்வர், அங்கஜன் இராமநாதன் ஆகியோர் இப்பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது ஜனாதிபதி பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன், இரு சிங்கள சிறுவர்களினால் தமிழ் மொழியில் ஜனாதிபதியை "தந்தை" என வர்ணித்து பாடலும் இசைக்கப்பட்டது. இதன்போது ஜனாதிபதி தமிழில் உரையாற்றிய போது அங்கு கூடியிருந்த மக்களின் கைதட்டல் சத்தம் வானைப் பிளந்தது.

யாழ். நகரில் நடந்த ஒரு பெரிய விழா போன்று மக்கள் வெள்ளம் எங்கும் பரவிக்காணப்பட்டது. சிறுவர் முதல் முதியோர் வரை பெரும் ஆர்வத்துடன் இப்பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டதை அவதானிக்கமுடிந்தது. (இ,25)

## காங்கேசனில்...

டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் ஆரம்பித்து வைத்துள்ள அதேவேளை, உத்தியோகபூர்வ பயணத்திலும் பங்கேற்றிருந்தனர்.

2011 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி ஓமந்தை வரையும், 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14 ஆம் திகதி கிளிநொச்சி வரையும் படிப்படியாக நீடிக்கப்பட்ட ரயில் சேவை 2014 மார்ச் 4 ஆம் திகதியன்று பளை வரை நடத்தப்பட்டது. அதன் பின்னர் 2014 ஒக்ரோபர் 13 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தை யாழ்தேவி சென்றடைந்தது.

## யார் எந்தப்...

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் வேறு. அபிவிருத்தி வேறு. இருண்ட யுகமாக இருந்த 30 ஆண்டுகளின் பின் அபிவிருத்தியில் 5 ஆண்டுகள் கடந்துள்ளன. நீங்கள் எங்கு சென்று பார்த்தாலும் நாம் செய்த அபிவிருத்தியைத்தான் பார்க்கமுடியும். மகிந்தோதய ஆய்வுகூடம் போன்ற பல அபிவிருத்திகள் கல்வித்துறைக்கு மேற்கொண்டமையால்தான் இன்று உயர்தரத்தில் உங்களின் மாணவன் முதலிடம் பெற்றுள்ளான். இது பெருமையான விடயம்.

ஆனால் எதிரணியில் போட்டியிடும் மைத்திரி, கட்டணத்துடன் எதிர்கால கல்வியையும் தொழில்நுட்பக் கல்வியையும் பெறமுடியும் என தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறி, எதிர்காலத்தில் இலவசக் கல்விக்கு வேட்டுவைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஆனால் இலவசக் கல்வியிலும், இலவச சுகாதார சேவையிலும் எவரையும் கைவைக்க விடமுடியாது. எதிர்கால சந்ததியின் கல்வியை மழுங்கடிக்க விடமுடியாது.

வடமாகாண சபைத் தேர்தலை பலர் தடுத்தும் நான் நடத்தினேன். கூட்டமைப்பு பெரும்பான்மை பெறும் எனத் தெரிந்தும் உங்களுக்காக தேர்தலை நடத்தி அவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்தேன். அவர்கள் வேலை செய்கிறார்களா என்பதை உங்களிடம்தான் கேட்கவேண்டும்.

ஆனால் ஒதுக்கப்பட்ட நிதியில் 50 சதவீதம் வரையில்தான் செலவுசெய்துள்ளதால் அவர்கள் வேலை செய்யவில்லை என்றுதான் என்னால் கூறமுடியும். இரணைமடு நீரை உங்களுக்கு வழங்க அவர்கள் தடையாக இருக்கிறார்கள். ஆனால் கட்டாயம் அந்நீரை உங்களுக்கு நான் பெற்றுத்தருவேன். பேசித் தீர்ப்பதற்காக அவர்களை அழைத்தும் பேச்சுக்கே வருகிறார்களில்லை.

இனவாத அரசியல் மிகமிக மோசமானது. எமக்குத் தேவை சகோதர பாசம். இனவாதம் பேசும் கூட்டமைப்பின் தலைவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் உள்ளனர். ஆனால் உங்களின் பிள்ளைகள் இந்த நாட்டில்தான் உள்ளனர். அவர்களின் எதிர்காலம் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டும்.

உங்களுக்கான எல்லா வேலைத்திட்டங்களிலும் எங்களுடன் உங்களது டக்ளஸ் தேவானந்தா ஒன்றிணைந்து உங்களது அபிவிருத்தி குறித்து எமக்கு தெரிவித்து உங்களுக்காக உழைத்து வருகிறார்.

அவர் அன்றும் அப்படித்தான் சொன்னார், இன்றும் அப்படித்தான் சொல்கிறார், இனியும் அப்படித்தான் சொல்வார். அவருக்கு எனது பாராட்டுக்கள். அதேபோல் இங்குள்ள யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கூட உங்களது அபிவிருத்தி குறித்துத்தான் எம்மிடம் எப்போதும் பேசுவார். இங்கே டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையின் கீழ் இளைஞர் அணிகளை உருவாக்கி வருகின்றனர். அதன்மூலம் அபிவிருத்திகளை முன்னெடுக்கமுடியும்.

தற்போது உங்களுக்கான மின்சாரவசதி, போக்குவரத்து, சுகாதாரம், தொலைபேசி வசதி எல்லாம் எம்மால் மிகவிரைவாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. எங்கும் போகலாம், வரலாம், பயமில்லை. நாம் இந்த வரவு செலவுத் திட்டத்தில் பல நிதியுதவிகளையும், அபிவிருத்தியையும், நட்டஈடுகளையும் வழங்கியுள்ளோம். அவை அனைத்தும் உங்களுக்கு கிடைக்க வேண்டும். அதற்கு நீங்கள் என்னுடன் இணைய வேண்டும். தெரியாத தேவதையை விட தெரிந்த பிசாசு நல்லது என சொல்வார்கள். நான் தெரிந்த பிசாசு என்பதால் தெரியாத தேவதையான மைத்திரியை விட நான் நல்லது என்பதால் என்னை நம்பலாம்.

வடக்கின் வசந்தம் உங்களின் வசந்தம். அதை நீங்கள் உணர்ந்து சிந்தித்து செயலாற்ற வேண்டும். மைத்திரியை உங்களுக்கு தெரியுமோ தெரியாது. ஆனால் என்னை உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் இங்கு வந்தாரோ தெரியாது. ஆனால் நான் 11 முறை வந்து உங்களுடன் இருந்துள்ளேன். எனவே உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி நீங்கள் சிந்தித்து செயலாற்றுங்கள் என்றார். (இ,25)

## துணிச்சலான...

கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரண்டு பிரதான அணிகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் போட்டியிடுகின்றன.

தமிழ் பேசும் மக்களின் சார்பான கட்சிகளோடும், தமிழ் பேசும் மக்களுக்காகக் குரல் கொடுத்து வரும் இடதுசாரிக் கட்சிகளோடும் கூட்டுச்சேர்ந்திருக்கும் எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு புறம். தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைக்கு எதிரான, இனவாத கூட்டாக சேர்ந்திருக்கும் எதிரணி இன்னொரு புறம்.

சிங்கள மக்கள் மத்தியில் இனவாதம் இங்கு இருக்கக் கூடாது என்று பேசியபடியே தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் அதே கருத்துக்களை பேசி, எங்கும் ஒரே முகம் காட்டி வரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அணியினர் இன் னொரு புறமும்.

சிங்கள மக்கள் மத்தியில் இனவாத நச்சு கருத்துக்களைப் பேசிக்கொண்டு.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நல்லவர்கள் போல் நடித்து, இரட்டை முகம் காட்டும் எதிரணியினர் ஒரு புறமும், தன்னுடன் கூட்டுச்சேர்ந்திருந்த இனவாத சக்திகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், இனவாதிகளைக் கட்டுப்படுத்தும் ஆளுமையோடு, தமிழ் பேசும் மக்களுக்கு அபிவிருத்தி முதற்கொண்டு, அரசியல் தீர்விற்கான பாதையை திறந்து விட்டிருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு புறமும், தமிழ் பேசும் மக்களுக்கு விரோதமான, அதே இனவாத சக்திகளை இன்று தம்முடன் இணைத்துக்கொண்டாலும், அவர்களைக் கட்டுப்படுத்தி எமது மக்களுக்கு எதையும் ஆற்ற முடியாத, ஆளுமையற்ற எதிரணியினர் இன்னொரு புறமும்...

எமது தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற விரும்பும் யதார்த்தவாதிகளை, தனது நடைமுறை செயற்பாடுகளால் மட்டும் தம்மோடு இணைத்து வைத்திருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அணியினர் ஒரு புறமும்,

கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்து வாக்குறுதிகள் மட்டும் வழங்கியவர்கள் ஒருபுறம். வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற ஜனாதிபதி மறுபுறம்.

இதில் யாரை நீங்கள் ஆதரிக்கப்போகிறீர்கள் என்பது உங்களது தீர்மானம்.

தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எதையும் கூறாதவர்கள் ஒருபுறம். எமது கோரிக்கைகளை உள்வாங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்னொரு புறம்.

நான் அரசியல்வாதி அல்ல. ஒரு மாபெரும் அரசியல் விடுதலைப் போராட்ட இயக்கத்தையே வழி நடத்திச் சென்றவன்.

என்னுடன் கூட இருப்பவர்களில் பலரும் அரசியல்வாதிகளல்ல. அவர்களும் அரசியல் விடுதலைப் போராளிகளே. ஆகவேதான், இன்று வரையில் நான் ஒரு அரசியல் போராளியாகவே வாழ்ந்து வருகின்றேன்.

எனவேதான் நான் உங்களுக்கு எப்போதுமே சரியான வழிமுறைகளையே காட்டிக்கொண்டிருக்கிறேன்.

எனது வழிமுறையில் இடப்பெயர்வுகளுக்கோ, இழப்புகளுக்கோ, அழிவுகளுக்கோ, துன்பங்களுக்கோ, துயரங்களுக்கோ இடமில்லை.

அந்த வகையில் நான் அடிக்கடி ஜனாதிபதியைச் சந்தித்து, எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவே கலந்துரையாடி வருகின்றேன். அந்த வேளைகளில் ஜனாதிபதி அடிக்கடி சொல்லுவார் நீங்கள் புலிகளைவிட மோசமானவர். புலிகள் கூட என்னை இந்தளவு தொந்தரவு செய்யவில்லை என்று.

நான் எப்போதும் நடைமுறைச் சாத்தியமாகவே அணுகுகின்றவன். அதாவது கடந்த காலத் தவறான தமிழ் அரசியல் வழிநடத்தலால் எமது மக்கள்

முள்ளிவாய்க்கால் வரை செல்லவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டார்கள். எமது மக்கள் முட்செடிக்குமேல் விழுந்த சேலையாகவுள்ளனர். அதனைப் பக்குவமாகவே மீட்கவேண்டும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை, மாகாணசபை முறைமையை நடைமுறைப்படுத்துமாறு நான் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவிடம் கேட்டிருக்கிறேன். முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கவிடம் கேட்டிருந்தேன். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கேட்டேன். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் கூடக் கேட்டிருக்கிறேன். இறுதியாக இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமும் கேட்டிருந்தேன்.

எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே அந்த செயல் வீரன். சொல்வதை செய்பவர், செய்வதை சொல்பவர். அவர் யார்?....... மகிந்த ராஜபக்ஷவே.

அவரையே நான் இன்று உங்களிடம் அழைத்து வந்திருக்கிறேன். ஆட்சி மாற்றம் தேவை என்கிறது தமிழத் தேசியக் கூட்டமைப்பு.

ஆனாலும், வடமாகாண சபைத் தேர்தலை நடத்தி, ஏனைய மாகாணங்களை விடவும் தமிழ் பேசும் மக்களின் வட மாகாண சபைக்கே அதிகூடிய நிதியை ஜனாதிபதி ஒதுக்கித் தந்திருந்தார்.

தமிழ் பேசும் மக்களின் வடமாகாண சபைக்கு அதிகூடிய நிதியை ஒதுக்கித் தந்த மகிந்த ராஜபக்ஷவின் அரசில் ஆட்சி மாற்றம் வேண்டுமா?..

அல்லது அந்த நிதியை எமது மக்களுக்காக செலவழிக்காமல், அரசாங்கத்தின் திறைசேரிக்கே திருப்பி அனுப்பி வைத்த வடமாகாண சபையில் ஆட்சி மாற்றம் வேண்டுமா?....

நீங்களே சொல்லுங்கள். ஆட்சி மாற்றம் எங்கு தேவை?... மத்திய அரசிலா?... அல்லது வட மாகாண சபை ஆட்சியிலா?... எங்கு ஆட்சி மாற்றம் தேவை?....

அன்றைய தமிழ்த் தலைமைகள் மாகாண சபையை அன்றே ஏற்றுக்கொண்டிருந்தால், அல்லது சரியாகப் பயன்படுத்தியிருந்தால், எமது மக்கள் முள்ளிவாய்க்கால் வரை சென்றிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்காது.

புலிகளை அழித்ததில் தமக்கே 75 வீதம் பங்குண்டு என்று சந்திரிகா பேசிக்கொண்டிருக்கிறார்.

புலிகளை பேச்சு வார்த்தை என்ற பொறிக்குள் இழுத்து, அவர்களை உடைத்து, பலவீனப்படுத்தியது நானே என்று ரணில் விக்கிரமசிங்க பேசிக்கொண்டிருக்கிறார்.

யுத்தத்தைத் தானே முன்னின்று நடத்தி, பீரங்கிப் படையோடு நின்று வெற்றி கண்டதாக சரத்பொன்சேகா பேசிக்கொண்டிருக்கிறார்.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜோர்தான் சென்றிருந்த போது...அந்த இறுதி யுத்த நாட்களில் தன்னிடமே பிரதி பாதுகாப்பு அமைச்சு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதாகவும், தானே முள்ளிவாய்க்காலில் கொத்துக்குண்டுகள் போட்டு புலிகளை அழித்ததாக எதிரணி வேட்பாளர் மைத்திரிபால பேசிக்கொண்டிருக்கிறார்.

புலிகளை தாமே அழித்ததாக இவர்கள் அனைவரும் போட்டி போட்டு உரிமை கோரிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி என்றால் தமிழ் பேசும் மக்களின் அழிவுகளுக்கு தாமே காரணம் என்று அவர்களாகவே சிங்கள மக்கள் மத்தியில் உரிமை கோரிக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் இப்படி கூறும் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நாம் ஏன் நிராகரிக்க வேண்டும்?... ஏன் வெறுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# இறுதி யுத்த கால அழிவுகளின் சூத்திரதாரி மைத்திரியும்தான்

## த எக்கனோமிஸ்ற் சஞ்சிகை வர்ணிக்கிறது

ஈழத் தமிழினத்தின் மீதான தாக்குதல்களின் சூத்திரதாரிகளில் ஒருவராக ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளாராக களமிறக்கப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேனவும் ஒருவரென 'எக்கனோ மிஸ்ற்' The Economist சஞ்சிகை செய்திவெளியிட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் இறுதிக் கட்டப் போரில், 2009 மே 17 ஆம் திகதி வரையிலான கடைசி இரண்டு வாரங்கள், பாதுகாப்பு அமைச்சராக மைத்திரிபால சிறிசேனவே பொறுப்பு வகித்தார் என எக்கனோமிஸ்ற் தெரிவித்துள்ளது.

இக்காலப்பகுதியில் மகிந்த ராஜபக்ச வெளிநாட்டுப் பயணத்தினை மேற்கொண்டிருந்த நிலையில் அவர் வகித்திருந்த பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பினை மைத்திரிபால சிறிசேனவிடமே ஒப்படைந்திருந்தார்.

Last days of the Raj? தலைப்பிட்டு வெளியிடப்பட்டுள்ள கட்டுரையொன்றிலேயே இவ்விவகாரத்தினை எக்கனோமிஸ்ற் சஞ்சிகை அம்பலப்படுத்தியுள்ளது.

போரின் உச்சக்கட்ட காலமாக அமைந்த இக்காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கொத்துக் கொத்தாக படுகொலை செய்யப்பட்டிருந்ததோடு புலித்தேவன், பா.நடேசன் உட்பட விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டும் இருந்தனர்.

பிரித்தானியாவின் சனல்-4 தொலைக்காட்சி வெளிக் கொணர்ந்த பாலகன் பாலசந்திரன், இசைப்பிரியா உட்பட பலரும் இக்காலப்பகுதியிலேயே படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

பெரும் இனஅழிப்பொன்றின் ஊடாக தமிழர் தேசத்தினை ஆக்கிரமித்து, தற்போது அனைத்துலகத்தின் குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள இலங்கையின் இராணுவத்தளபதிகளையும் மற்றும் அரசியல் தலைவர்களையும் பாதுகாப்பேன் என மைத்திரிபால சிறிசேன சூளுரைத்து வருகின்ற சூழலில், எக்கனோமிஸ்ற் சஞ்சிகை இவ் விவகாரத்தினை அம்பலப்படுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடதக்கது.

## விமானப்படைச் சிப்பாய் காயம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார கூட்டத்தில் பாதுகாப்பு கண்காணிப்பில் ஈடுபட்ட விமானப்படை சிப்பாய் ஒருவருக்கு ஹெலிகொப்டரின் விசிறி வெட்டி படுகாயமடைந்துள்ளார்.


பலாலி விமானப்படை அலுவலகத்தினைச் சேர்ந்த சம்பத் பியலால் (வயது-31) என்ற சிப்பாயே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் நடைபெற்றது.

அக்கூட்டத்திற்கு ஜனாதிபதி ஹெலிகொப்டரில் வருகை தந்து, யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இறங்கினார்.

அப்போது பாதுகாப்பு கண்காணிப்பில் ஈடுபட்ட விமானப்படை சிப்பாய் ஹெலிகொப்டரிற்கு அருகில் சென்ற போது, ஹெலிகொப்டரின் விசிறி குறித்த சிப்பாயின் தலையில் வெட்டியதில் படுகாயமடைந்துள்ளார். (25)

## மன்னார் ஆயருடன் மகிந்த



தேர்தல் பிரசாரத்துக்காக மன்னார் மாவட்டத்துக்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மடுதேவாலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஜனாதிபதியை வரவேற்றார். அங்கு இடம்பெற்ற பிரார்த்தனையில் கலந்து கொண்டு ஜனாதிபதி மடு அன்னையை வழிபட்டார். அதனைத் தொடர்ந்து அங்கு அருட்தந்தையர்களுடன் கலந்துரையாடினார்.

## அனந்தி மீது மாவை பாய்ச்சல் மயங்கி விழுந்தார் அனந்தி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் திடீர் என்று மயங்கி விழுந்து சுகயீன முற்றதன் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த அவர் திடீரென மயங்கி விழுந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு அளிக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்த பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அனந்தி சசிதரன் கூட்டமைப்பின் இந்த முடிவு ஏமாற்றம் அளிப்பதாகவும் ஜனாதிபதித் தேர்தலை தான் புறக்கணிப்பதாகவும் அறிவித்து பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார்.

இந்நிலையில் நேற்றுக் காலை அனந்தி சசிதரனுக்கு தொலைபேசி அழைப்பெடுத்த இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, அனந்தியை கடுமையாகத் திட்டியதாகவும் அதனால் அனந்தி தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த போதே மயங்கி விழுந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இது குறித்து அனந்தியிடம் வினவ அவரது தொலைபேசிக்கு அழைப்பு எடுக்கும் முயற்சி கைகூடவில்லை. அனந்தியின் கைபேசி நேற்று இரவு நிறுத்தப் பட்டிருந்தது.

## உறுதியாகியுள்ள ஜனாதிபதியின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்ய உறுதி பூணுங்கள்

### நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு



எதிர்வரும் எட்டாம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றி உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. எனவே அந்த வெற்றிக்கு பங்களிப்புச் செய்ய தமிழ் மக்களும் உறுதி பூண வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துகொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவலங்களுக்கும், அழிவுகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்து நாட்டில் நிலையான அமைதியை ஏற்படுத்தி விரைவான அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் தமிழ் மக்களுக்கு உண்டு. இந்தத் தடவை தமிழ் மக்கள் அந்தக் கடமையினையும்,பொறுப்பினையும் செய்வார்கள் என்பது கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வந்து ஜனாதிபதிக்கு அளித்த வரவேற்பு அதனை வெளிப்படுத்துகிறது.

சில ஊடகங்கள் மக்களைத் தொடர்ந்தும் தவறாகவே வழி நடத்தி வருகின்றன. தோற்றுப் போகின்ற தீர்மானங்களுக்கு இவ்வாறான ஊடகங்கள் பொய் பரப்புரைகளை மேற்கொள்கிறது. இது தமிழ் மக்களை மீண்டும் மீண்டும் தவறான பாதைகளுக்கு இட்டுச் செல்கிறது. எமது மக்களை பொறுத்தவரை இது ஒரு ஆரோக்கியமான செயற்பாடு அல்ல. எனவே மக்கள் சுயாதீனமாக இரண்டு பக்கங்களையும் ஒப்பிட்டு சரி பிழைகளை ஆராய்ந்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். நாட்டின் எல்லா இனவாதிகளின் கூட்டாக அமைந்துள்ள பொது எதிரணியின் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் தமிழ்பிரச்சினைகள் தொடர்பில் மேலும் சிக்கலான நிலைமைகளே உருவாகும் எனவும் குறிப்பிட்ட அவர் ஒவ்வொரு தேர்தல்களிலும் மக்களின் வாக்குகளைப் பெறுகின்றவர்களே வெற்றிப்பெற்றுள்ளனர் மக்கள் தோற்றுப்போனவர்களாகவே இருந்துள்ளனர். ஆனால் இந்தத் தேர்தலில் மக்கள் வெற்றிபெற வேண்டும் மக்கள் வெற்றிப்பெற வேண்டும் என்றால் மகிந்த வெற்றி பெற வேண்டும். மகிந்தவின் வெற்றியே மக்களின் வெற்றி எனவும் குறிப்பிட்டார்.

## கிளிநொச்சிக்கு அண்மையிலுள்ள வசந்தநகர் பகுதிக்கு மின்சாரம் இல்லை

முல்லைத்தீவு மாவட்டத்தில் முறிகண்டி கிழக்கு, வசந்த நகர் மக்கள் மின்சார வசதி எதுவும் இன்றித் தாம் பெரிதும் இன்னல்களை அனுபவிப்பதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட இந்தக் கிராமம் முல்லைத்தீவு நகரில் இருந்து பல கிலோ மீற்றர்கள் தூரத்தில் காணப்படுகின்றது.

கிளிநொச்சி நகரில் உள்ள நீர்மின்சார இணைப்பு நிலையத்திற்கு அண்மைய தூரத்தில் உள்ள இக்கிராமமக்கள் மீள் குடியேறி ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இதுவரை மின்சார வசதி வழங்கப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்றாக இருக்கும் இக்கிராமம் தமக்கான வசதி வாய்ப்புக்களைப் பெறுவதில் தொடர்ந்து நெருக்கடி நிலைமையைச் சந்தித்து வருகின்றது.

மின்சார வசதி இல்லாததால் பாடசாலைக் கல்வியைக் கூடக் கற்க முடியாமல் மாணவர்கள் கஷ்டப்படுகின்றனர். மற்றும் வீட்டில் தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதில் தாம் இடர்களை எதிர்கொள்வதாகவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (81)

## மாமன், மாமி மீது மருமகன் கத்தி வெட்டு

நெல்லியடி, துன்னாலை, ஆட்டுப்பட்டிக் கொலணிப் பகுதியில் மாமா மற்றும் மாமி ஆகியோரை மருமகன் கத்தியால் வெட்டிக் காயப்படுத்திய சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

மரண வீடொன்றுக்குச் சென்று வந்த சம்பவம் தொடர்பாக ஏற்பட்ட கருத்து மோதல் காரணமாக இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மருமகனின் கத்தி வெட்டுக்கு இலக்கான மாமனார் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சந்தேக நபரைக் கைது செய்து நெல்லியடிப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

## ஒன்பது பேர் அரசுடன் இணைவு

(வவுனியா)

வவுனியா வைரவப் புளியங்குளம் யங் ஸ்டார் விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகளின் பிரதேசசபை உறுப்பினர்கள் 9 பேர் அரசாங்கத்துடன் பொது மேடையில் வைத்து இணைந்து கொண்டனர்.

முப்பது ஆண்டுகளாக தொடர்ந்த யுத்தச் சூழ்நிலைகள் இப்போது இல்லாதபடியால், நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றாக வாழவேண்டும் என்றும் குறுகிய அரசியல் நோக்கம் அவசியமில்லை என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இப்பத்திரிகை இல.37 பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனனும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஜனவரி 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.